# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 327
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மார்கழி 22 ஷவ்வால் 27 செவ்வாய்க்கிழமை [6-1-70]

# மருந்து வகை

## தொற்று நோய் பரவலாம் என அச்சம்

கோட்டை, திங்கள்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரசாங்கம் அவசரம் அவசரமாக மருந்து வகைகளை அனுப்பிவைத்துள்ளது. இப்பகுதியில் தொற்றுநோய் பரவலாம் என அஞ்சப்படுவதால் சுகாதாரப்பகுதி இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டது.

வெள்ளம் காரணமாக நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவலாம் என்று அஞ்சப்படுகிறது. சுகாதாரப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் கூடிய கவனம் செலுத்தி அங்கு மருந்துவகைகளை விநியோகித்து வருகிறது.

மலேரியா நோய் பரவாமல் தடுப்பதற்காக டி. டி. ரி. தெளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெள்ளத்தினல் கொடிய நோய்கள் பரவிவிடுமோ என அரசாங்கம் கருதுவதால் சுகாதார இலாகா நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும். லொறிகளிலும் இலாகா வாகனங்களிலும் மருந்துகள் அனுப்பப்படுகிறது.

சுதந்திரத்துக்குப்பின்

## வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே அரசாங்கம்

### நாவலப்பிட்டி எம்.பி.யின்பெருமிதம்

கம்பளை, திங்கள்

''சுதந்திரத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்களில் தேசிய அரசாங்கம் மட்டுமே, தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கின்றது. இதன் காரணமாகவே இன்று மக்கள் தேசிய அரசாங்கத்தின் பக்கம் இருந்துவருகிருர்கள்.

இவ்வாறு நாவலப்பிட்டி எம்.பி. திரு. சந்திராகருணரத்ன சிரமதான இயக்க நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் கூறினர். மாரியவத்தை என்ற இடத்துக்கும் பிரத்துகொட என்ற இடத்துக்குமிடையில் வாகனப் போக்குவரத்துவசதிக்கானபாதையொன்றை சிரமதானம் மூலம் பூர்த்திசெய்வதற்கான கொஸ்கொல்ல இளைஞர் இயக்கப் ஆரம்பித்த நிகழ்ச்சியில் எம். பி. பேசினர். இந்த இயக்கத்தில் சுமார் 1500 இளைஞர்கள் கலந்துகொண்டார்கள்.

சமீபகாலம்வரை ஏதாவது ஒரு சமுகநிகழ்ச்சிக்கு 50 இளைஞர்களை யாவது சேர்த்துக் கொள்வது குதிரைக் கொம்பாகவிருந்து வந்தது. அரசியல் வேறுபாடே இதற்குக் காரணம் ஆனல் இப்பொழுது மக்கள் இந்த வேற்றுமைகளை மறக்கத் தொடங்கியுள்ளார்கள் என்ருர் திரு. கருணரத்ன இதற்குக் காரணப் பிரதம மந்திரியின் திட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படத் தொடங்கியிருக்கின்றது. இதனல் அரசாங்கத் திட்டங்களுக்கு அவர்கள் ஆதரவுகொடுக்க முன்வருகிருர்கள் என்று அவ மேலும் குறிப்பிட்டார்.

# 29 நாட்களாக நடந்த

# ஆஸ்பத்திரி தொழில்நுட்ப ஊழியர் வேலைநிறுத்தம் முடிவு

கோட்டை, செவ்.

கடந்த 29 நாட்களாக நடைபெற்றுவந்த ஆஸ்பத்திரி தொழில்நுட்ப ஊழியர்களது வேலைநிறுத்தம் நேற்று கைவிடப்பட்டது.

இந்த ஊழியர்கள் அங்கம்வகிக்கும் இரு தொழிற் சங்கங்களின் தலைவர்கள் நேற்று சுகாதாரஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஏற்பட்ட உடன்பாட்டையடுத்தே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணயம் விசேஷபடிகள் ஆகியவற்றை முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தத்திலீடுபட்டார்கள்.

இந்த வேலைநிறுத்தத்தால் பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சத்திரசிகிச்சைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

## கச்சேரிகியூவில் நின்றவர் இரு தடவை மயங்கினர்

யாழ்ப்பாணம், செவ்

கச்சேரி செல்வதற்காக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் காத்துநின்ற ஒருவயோதிபர் நேற்று முன்தினம் மாலை இருதடவை மயங்கி விழுந்தார்

சுமார் 15 நிமிடமாக கியூவில் பஸ்ஸிற்காக காத்துநின்ற வயோதிபர்திடீரென மயங்கி விழுந்ததும் அருகில் நின்ற பிரயாணிகள் முதலுதவியளித்தனர்.

15 நிமிடத்தின் பின்மடத்தடி செல்வதற்காக வந்த பஸ்ஸிலும் அந்த வயோதிபர் செல்லவில்லை. மீண்டும் அந்தவயோதிபர் எழுந்து நின்ருர்.

சுமார் 10 நிமிடம் சென்றதும் மீண்டும் அந்த வயோதிபர் அதே இடத்தில் மயங்கி விழுந்தார். பிரயாணிகள் அவரை கொடிகாமம் செல்லும் பஸ்ஸில் ஏற்றி கச்சேரிக்கு அனுப்ப முயற்சித்தபோது பஸ் ஊழியா அதற்கு மறுத்து விட்டனர்.

## இவ்வருடம் நெல் அதிகம் விளையும்

கோட்டை, திங்கள்

இவ்வருடம் நெல் உற்பத்தியில் அதிக முன்னேற்றம் ஏற்படுமென அரசாங்கம் கருதுகிறது. இவ்வருடம் போதிய மழை பெய்துள்ளதால் கடந்தவருடம் போல வரட்சி ஏற்படமாட்டா...

## 'வைகறை' வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்.

'வைகறை' சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று மாலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கணக்கியல் கல்லூரி மண்டபத்தில் புலவர் பார்வதிசிவம் தலைமையில் நடைபெறும்.

## வரி அறவிடுவதில்லை: கரவெட்டியில் முடிவு

பருத்தித்துறை, திங்கள்

கடந்தசிலநாட்கள்பெய்த மழையினல் பாதிக்கப்பட்ட வயற்சொந்தக்காரர்களிடம் வரியறவிடுவதில்லையெனகரவெட்டி பயிர்ச்செய்கைக் குழு நேற்றுமுன்தினம்நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானித்தது.

தலைவர் திரு. மு. வல்லிபுரம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில்விளைவுகுறைவான பகுதிகளில் உள்ள வயல் சொந்தக்காரர்களிடம் குறைந்தவரி அறவிடப்படவேண்டுமென்றும்தீர்மானிக்கப்பட்டது. மேலும் சென்றவருடம் அறவிட முடியாதவரிகளை வழக்குத்தொடர்ந்து அறவிடப்படவேண்டுமென்றும், அவ்வாறு வரிசெலுத்தத் தவறுவோருக்கு அரசாங்க உதவிகள் கிடைக்காது நிறுத்த வேண்டுமென்றும் தீர்மா...

## தி. மு. க. மகாநாடு

சென்னை, ஜன. 5

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்த பின்பு முதன்முறையாக அடுத்த மாதம் திருச்சி மாவட்டம் கரூரில் தனது மகாநாட்டை நடாத்துகிறது.

இத்தகவலை அமைச்சர் திரு. என். வி. நடராசன் தெரிவித்தார். இம்மகாநாட்டை அடுத்து மற்றைய இடங்களிலும் மகாநாடுகள் நடைபெறும்.

## முதலைகளுடன் 16 நாட்கள்

## சீட்டு மோசடி வழக்கில் எதிரி குற்றவாளி; தீர்ப்பு ஒத்திவைப்பு

மட்டுவில், திங்கள்

''எதிரிக்கும் எனக்கும் பதினைந்துவருட நட்பு உண்டு, சீட்டுக் கட்டுவதிலிருந்து இந்தத் தொடர்பு ஏற்பட்டது. 75 ரூபா சீட்டை 24 மாதத் தவணையில் கட்டி வந்ததின் பேரால் இவரிடமிருந்து எனக்கு 1581 ரூபா 24 சதம் வருமதியுண்டு, இந்த சீட்டைக் கட்டும் சகலரையும் எனக்குத் தெரியும்''

இவ்வாறு, சீட்டு வழக்கொன்றில் சாட்சியமளித்த மந்துவிலைச் சேர்ந்த சின்னவன் வேலன் என்பவர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. வி. விக்னராஜா முன் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சீட்டிற்கான பணத்தைக் குறிப்பிட்ட தவணையில்தாம் கட்டுவதாகவும் ஏனையோர் பணம் செலுத்தும் விதம் பற்றித் தமக்குத் தெரியாதென்றும் சின்னவன்வேலன் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

கெருடாவிலைச் சேர்ந்த பாண் வியாபாரி, சபாபதிப்பிள்ளை அருளம்பலம், இ. போ. ச. பஸ்கண்டக்டர் அம்பலவாணர் நடேசு ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரி தரப்பில், வழக்கறி...

## திரு. கிரிக்கு விண்ணில் பாதுகாப்பில்லை

கோட்டை, திங்... இம்மாதம் 8-ந் திகதி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தடி செல்வதற்காக வந்த

## திரு. கிரிக்கு விண்ணில் பாதுகாப்பில்லை

கோட்டை, திங்

பாரத ஜனதிபதி திரு. வி. வி. கிரி இலங்கைக்கு வரும் போது இலங்கைஅரசாங்கம் அவருக்கு வானில் பாதுகாப்பு அளிக்கமாட்டாது

திரு. கிரி பிரயாணம் செய்யவிருக்கும் இந்திய விமானப்படை விமானத்துடன் இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமானங்கள் ஒரேவேகத்தில் பறந்து செல்லமுடியாது என்பதே இதற்குக்காரணமென அறிவிக்கப்பட்டது.

இம்மாதம் 8-ந் திகதி கொழும்பு வந்தலடயும் பாரதஜனதிபதி 5 நாள்விஜயத்தை இலங்கையில் மேற்கொள்வர். அவர் கண்டிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம்செய்தபின்னர் நாடு திரும்புவார்.

சென்னை, ஜன. 5

திரு. கிரி இன்று புதுடில்லியிலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தபோது அவரை தமிழக கவர்னர், தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணநிதி ஆகியோர் அவரை வரவேற்றனர்.

## கொலை முயற்சிகளுக்கு அஞ்சி பணிய மாட்டோம்

### கேரள மந்திரி கூறுகிறுர்

திருவனந்தபுரம், ஜன. 5

திராகப்புட்டி வீச்சுக்கோ நாட்டு வெடிகுண்டுகளுக்கோ அஞ்சிகேரள அரசு பணிந்து விடாது என்று ராஜ்ய உள்துறை மந்திரி திரு. முகம்மது கோயா அறிவித்திருக்கிறுர்.

பயமுறுத்தல்கள் மூலம் அரசின் முற்போக்கு சீர்திருத்த நடவடிக்கைகளை தடைசெய்துவிடலாம் என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியினர் கருதுவார்களாஞல் அவர்கள் தவருகப்புரிந்துகொண்டிருக்கிறுர்கள் என்பதாகும் என்றுர் திரு. கோயா

தம்மீது திராவகப்புட்டியொன்றை வீசிக்கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி பற்றி அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் பேரணியொன்றில் அவர் உரைநிகழ்த்திஞர்.

திரு. நம்பூதிரிபாத் முதலமைச்சராகவிருந்த பொழுது ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் இரண்டு நாற்காலிகளைப் போட ஏற்பாடு செய்திருந்தார். ஒன்று அந்த நிலைய சப்-இன்ஸ்பெக்டருக்கு மற்றது அந்த ஊர் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசிக்கு. மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசிக்கான நாற்காலியை அகற்றியதுதான் அவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்திவிட்டது என்றுர் திரு. முகம்மது கோயா.

கோட்டை, திங்கள்

இவ்வருடம் நெல் உற்பத்தியில் அதிக முன்னேற்றம் ஏற்படுமென அரசாங்கம் கருதுகிறது. இவ்வருடம் போதிய மழை பெய்துள்ளதால் கடந்தவருடம் போல வரட்சி ஏற்படமாட்டாதென எதிர்பார்க்கப் படுகிறது. கடந்த வருடம் கடும் வரட்சியினுல் நெல் உற்பத்தியில் ஏட்பட்டபாதிப்பை இது சமாளித்துவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அம்பாந்தோட்டையில் பெருமழையினுல் 20,000 ஏக்கர் நெற்பயிர் நாசமாகிவிட்டதாகவும், மட்டக்களப்பில் 20 சதவீதமான நெல் பாதித்துவிட்டதாகவும் விவசாய இலாகாவின் புள்ளிவிபரம் தெரிவித்தது.

நாட்டின் பிரதான பல குளங்கள் தற்போது நிரம்பியுள்ளதால், இவ்வருடம் நெல் உற்பத்திக்கு தாராளமாக தண்ணீர் வழங்கமுடியுமென்றும். இதனுல் எதிர்பார்ப்பதைவிட அதிகமளவு விளையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## சிங்கள பாடபுத்தகங்களில் இலக்கண பிழைகள்

கோட்டை, செவ்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு பாடசாலைப் பாடப்புத்தகங்களாக்கப்பட்டுள்ள புத்தகங்களில் இலக்கணப் பிழைகள் இருப்பதாக பிரதமருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களைக் கொண்ட தூதுகோஷ்டி யொன்று பிரதமர் திரு டட்லி சேனநாயகாவைச் சந்தித்து இதுபற்றி எடுத்துக் கூறினர்.

...யிட்டுவிழா இன்று மாலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கணக்கியல் கல்லூரி மண்டபத்தில் புலவர் பார்வதிசிவம் தலைமையில் நடைபெறும்-

கோட்டை, திங்.

முகத்து வாரத்திலுள்ள மீன்பிடிக் கார்ப்பரேஷனில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்களுக்கும், சமயாசமய ஊழியர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக அங்குள்ள நிர்வாகக் கட்டடம் சில் வைக்கப்பட்டுள்ளது. இக் கைகலப்பையிட்டு ஐவர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

## கமக்காரர் கவலை

சுழிபுரம், திங்.

சமீபத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திஞல் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கமக்காரர்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். இவர்கள் போட்டிருந்த மிளகாய், கத்தரி, புகையிலை மேடைகள் வெள்ளத்திஞல் அள்ளுண்டு போனதே இவர்களது கவலைக்குக் காரணம் கைவசம் இவர்களிடம் பயிர் விதைகள் வேறு இல்லையாம்.

...விக்கப்பட்டது. மேலும் சென்றவருடம் அ... முடியாத வரிகளை வழக்குத்தொடர்ந்து அறவிடப்படவேண்டுமென்றும், அவ்வாறு வரிசெலுத்தத் தவறுவோருக்கு அரசாங்க உதவிகள் கிடைக்காது நி...த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. வயல்களுக்கு விஜயம் செய்து நஷ்டஈடு பற்றித் தீர்மானிப்பதற்கென மூவர்கொண்ட ஒரு சபையும் தெரிவுசெய்யப் பட்டது

## சிறைச்சாலையில் பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் களஞ்சியப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி, அனுராதபுரத்திற்கு மாற்றலாகிச் செல்லும் திரு. ஆர். ஞானசேகரத்தின் சேவையை பாராட்டிச் சிறைச்சாலைச் சக ஊழியர்களால் பிரிவுபசார வைபவம் ஒன்று நடாத்தப்பட்டது.

நேற்று நடந்த இவ்வைபவத்தில் திரு. ஞானசேகரத்தின் சேவையைப் பாராட்டி திரு. அரியநாயகம், திரு. இம்மானுவல், திரு. துரைராஜசிங்கம் ஆகியோர் பேசினர்.

திரு. என். வி. நடராசன் தெரிவித்தார். இம்மகாநாட்டை அடுத்து மற்றைய இடங்களிலும் மகாநாடுகள் நடைபெறும்.

## முதலைகளுடன் 16 நாட்கள் வாசம்

ஜோகன்னர்ஸ்பாக், ஜன. 5

16 நாட்கள் இரவும் பகலும் முதலைகளுடன் வாழ்ந்ததாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறுர்.

ஜோகன்னர்ஸ்பர்க்கிலிருந்து சுமார் 50 மைல் தொலைவிலுள்ள ஒருமிருககாட்சிசாலையில் இந்தச் சாதனையை அவர் புரிந்துள்ளார் முற்றுகவளர்ந்த 5முதலைகளுடன் 16 நாட்கள் இந்தத் தென்னுபிரிக்கர் இருந்தாராம். இந்த முதலைகளில் ஒன்றுக்கு தீனி போடுகையில் அவருடைய வலதுகையை அது கௌவியதால் ஏற்பட்ட காயத்தைத்தவிர வேறு காயமெதுவும் அவருக்கு ஏற்படவில்லையாம்.

இதைஏன் செய்தீர்கள் என்று கேட்டபோது, ''உலகில் மற்றவர்கள் செய்யாதஒன்றைசாதிக்க வேண்டும் என்பது எல்லாருக்கும் உள்ள ஆசைதானே'' என்று அவர் கேட்டார்.

## ஆரம்பம்

கோட்டை, திங்கள்

அம்பாறை ஹாடிதொழில் நுட்ப நிலையம் இம்மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது எனக் கல்வி இலாகா நேற்று அறிவித்தது

...ருந்து எனக்கு 1581 ரூபா 24 சதம் வருமதியுண்டு, இந்த சீட்டைக் கட்டும் சகலரையும் எனக்குத் தெரியும்''

இவ்வாறு, சீட்டு வழக்கொன்றில் சாட்சியமளித்த மந்துவிலைச் சேர்ந்த சின்னவன் வேலன் என்பவர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. வி. விக்னராஜா முன்னிலையில் சாட்சிய மளிக்கையில் கூறிஞர்.

மந்துவிலைச் சேர்ந்த எஸ். கந்தையா அல்லது பரமு என்பவர் 75/- ரூபா சீட்டு ஒன்றை ஆரம்பித்து, சிலரை ஏமாற்றியதாக. யாழ்ப்பாணம் விசேஷ குற்றத்தடுப்பு பொலிஸ் பகுதியால், இவ்...

...சாட்சியத்தில் தெரிவித்தார்.

கெருடாவிலைச் சேர்ந்த பாண் வியாபாரி, சபாபதிப் பிள்ளை அருளம்பலம், இ. போ. ச. பஸ்கண்டக்டர் அம்பலவாணர் நடேசு ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரி தரப்பில், வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜராஞர்.

மாஜிஸ்திரேட எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு, தீர்ப்பை இம்மாதம் 16-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## உள்ளூராட்சி வாரம் பெப்ரவரியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

உள்ளூராட்சி வாரத்தை பெப்ரவரி மாதம் 8-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை கொண்டாடுவதென நேற்று நடைபெற்ற யாழ். சனசமூகநிலையநிர்வாக மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு அதற்கான விசேஷ குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் தலைமையில் யாழ்ப்பாணம் கச்சேரி மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

பெப்ரவரி 8-ம் திகதி சமயவழிபாட்டுத்தினமாகக் கொண்டாடப்படும். 9-ம் திகதி தொழில் மகத்துவத் தினமாகவும். 10-ம் திகதி சுகாதார ஆரோக்கிய தினமாகவும், 11-ந் திகதி வீடமைப்பு சேரி ஒழிப்புத்தின மாகவும், 12-ம் திகதி நூல் நிலைய இலக்கிய விழா தினமாகவும், 13-ம் திகதி கலாச்சார விளையாட்டுத்தினமாகவும், 14-ம் திகதி சமூக தினமாகவும்கொண்டாடப்படும்

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்கள் சார்பிலும் உள்ளூராட்சி வாரம் கொண்டாட ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. சிறந்த சனசமூக நிலையங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

மட்டக் ளப்பு, திங்.

வெள்ளப்பெருக்கின் எதிரொலியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மலேரியா, குடல்நோய் ஆகியன பரவலாம் என அஞ்சப்படுகிறது. இதனுல் மட்டக்களப்பு மாவட்ட வெள்ள நிவாரண ஆலோசனைக் குழு மலேரியாத் தடுப்பு நோய் மருந்து வகைகளை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது.

# வடக்கில் எதிர்க்கட்சியினர் எந்தத்தொகுதிகளில் போட்டி?

### நிலைமையை நேரில் ஆராய்ந்தார் என். எம்.

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் வடக்குப் பகுதியில் எத்தனை தொகுதிகளில், யார் யாரை எதிர்க் கட்சிக் கூட்டணியின் சார்பில் போட்டிக்கு நிறுத்தலாமென்பது பற்றியும் எதிர்க் கட்சிக் கூட்டணி எந்தவிதமான போக்கை இங்கு அனுசரித்தால் வெற்றி வாய்ப்புக் கிடைக்கும் என்பது பற்றியும்எதிர்க் கட்சிக் கூட்டணியினர் இப்போது ஆராய்ந்து வருகின்றனர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு வந்த எதிர்க் கட்சிக் கூட்டணிப் பிரமுகரும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா இங்குள்ள முக்கிய இடதுசாரிப் பிரமுகர்களைச் சந்தித்து ஆலோசனை செய்ததாக அறியப்படுகிறது.

இங்குள்ள அரசியல் நிலைமை பற்றி அவர் விரிவாக ஆராய்ந்தறிந்து கொண்டதுடன் எதிர்க் கட்சிக் கூட்டணியில் ஏற்பட்டு வரும் கொள்கை மாறுதல் பற்றியும் அவர் தெரிவித்ததாகத் தெரிகிறது.

வடபகுதியில் எல்லாத் தொகுதிகளிலுமே எதிர்க் கட்சிக் கூட்டணியின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்த முடியுமா வென்பது பற்றியும் ஆலோசனை செய்யப் பட்டதாகவும் அறியப்படுகிறது.

சுதந்திரக்கட்சி

## தேர்தல் விஞ்ஞாபனம்; தமிழருக்கு சாதகம்

கோட்டை, திங்கள்

வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவுவது. தமிழ்மொழி விசேஷ விதிகள் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவது, தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்குவது ஆகிய கொள்கைகளை கூட்டாட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக்கொள்ளுவதென்று அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் கூட்டத்தில்முடிவுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழ்பேசும் மக்களோடு இணைந்து, அவர்களின் ஆதரவோடு தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென கூட்டத்தில் பல தலைவர்கள் வற்புறுத்தியதன்பேரில் இவ்வித முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

திருமதி ஸ்ரீமாவோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மைத்திரிபாலசேனநாயகா, திரு. ரி. பி. இலங்கரத்தின, திரு. பி. பி. ஜி. கலுகல்லே, டாக்டர் பதியுதீன் மஹ்மூத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திரு பீட்டர் கெனமன், திரு. லெஸ்லிகுணவர்த்தன திரு. ரி. பி. சுபசிங்க ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கையில், வடக்கு-கிழக்கில் இரு பல்கலைக் கழகங்கள், தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்குவது, தமிழ் முஸ்லிம் மக்களின் இழந்த உரிமைகளுக்காகப்போராடுவது போன்ற திட்டங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த அறிக்கை கூட்டத்தில் பரிசீலனைசெய்யப்பட்ட பின்னர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

அழகி மேரிஜோ நீரில் மூழ்கி மாண்ட விசாரணை

# செனட்டர் கென்னடி மீதான வழக்கு நேற்று ஆரம்பமாகியது

### 5 பெண்கள் சாட்சியமளிப்பர்

வாஷிங்டன் ஜன. 5

செனட்டர் எட்வேட் கென்னடியின் மீதான வழக்கு எட்காட்டவுனிலுள்ள நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப் பட்டது.

சென்ற வருடம் ஜூலை 18-ம் திகதி செனட்டர் கென்னடியுடன் காரில் ஒன்றுகச் சென்ற அவரது அந்தரங்கக் காரியதரிசியான 28 வயது அழகி மேரி ஜோ கோபே காருக்குள் இருந்தபடியே நீருள் மூழ்கி மரணமானது சம்பந்தமாகவே இந்த வழக்கு நடைபெறுகிறது.

மசாசுசெக்ஸ் கரையோரமாக உள்ள தீவொன்றின் குளத்துக்குள் செனட்டர் கென்னடியின் கார் பாய்ந்தபோதே மேரி மாண்டதாகவும் பாலமொன்றை கார் கடக்கும்போதே இச் சம்பவம் நடைபெற்றதாகவும் கூறப்பட்டது.

இன்று ஆரம்பமான விசாரணையில் 5 பெண்களும் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் செனட்டர் கென்னடி கலந்துகொண்டவிருந்தில் பங்குகொண்ட 19 பேரும் சாட்சியமளிக்கவிருக்கிறுர்கள்.

அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் நிக்சனுடன் போட்டியிட்டு கொலையுண்ட றுேபேர்ட் கென்னடியின் அந்தரங்கக் காரியதரிசியாகவும் மேரி ஜோ பணிபுரிந்தார்

எட்காட்டவுண் மாஜிஸ்திரேட் திரு. ஜேம்ஸ் ஏ. போயில் முன்னிலையில் விசாரணை நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகளும், நெல்லி இரசம் விற்பனை செய்வதற்கு பெண்களும், சைக்கிள் வியாபாரத்திற்கு ஆண்களும் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1757

### அறிவித்தல்

ஆ. சி. முருகேசு ஆகிய நான் அறியத்தருவது. 5-1-1970ல் வடமாகாண அரசாங்கஅதிபருக்கு கிளிநொச்சியில் இருக்கும் பராசக்தி படமாளிகைக்கு புதிதாக பொழுது போக்கு பார் லைசென்ஸ் பெற விண்ணப்பித்துள்ளேன். இதன் முடிவு திகதி 30-9-70.

ஆ. சி. முருகேசு,
விண்ணப்பதாரர்.

1905

THE JAFFNA ACADEMY
&
School Of Technology
Chundikuli, Jaffna
Phone No. 617

New Term commenced on 3-1-70.

G. C. E .(Ordinary Level and (Advanced-Level) 1st year and 2nd year classes in the Tamil medium.

Special revision classes in the English medium for the G. C. E (Advanced-Level) December 1970 Examination

Apply early for admission on forms available in the office. DIRECTOR.

4-1-70 1903


சர்வதேச

## 'மெடிக்கல் டிரெக்டர்வருகிறார்

பம்பலப்பிட்டி, திங்கள்

சர்வதேச திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனத்தின் வைத்திய பணிப்பாளரான (மெடிக்கல் டிரெக்டர்) கலாநிதி மல்கம் பொட்ஸ் இம் மாதம் 8-ம் திகதி இலங்கை வருகிறார்.

கருத்தடை மாத்திரை உட்பட சகலவிதமான குடும்பத்திட்ட முறையில் நிபுணத்துவம் மிக்க கலாநிதி பொட்ஸ், கேம்பிரிட்ஜ் ஸிட்னி சசெக்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆணையாளர் ஆவர்.

இவர் எழுதிய 'கருத்தடை முறைகள்' என்ற நூல் அகில உலகப் புகழ் பெற்று வெளிநாடுகளில் உள்ள பல்வேறு கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஒரு பாடப் புத்தகமாகக் கருதப்படுகிறது.

இம் மாதம் 9-ம் திகதி பிற்பகல் இவர் இலங்கைபத்ரிதிகையாளர்களை சந்திக்கவிருக்கிறார். இவரது மனைவியரான திருமதி (வைத்திய கலாநிதி) பொட்ஸும் இலங்கைக்கு விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## திரும்புகின்றனர்

கோட்டை, திங்

இலங்கையில் உயர்கல்வி பற்றி ஆராய்வதற்காக இங்கு வந்திருந்த மூன்று வெளிநாட்டு நிபுணர்களும் இம்மாதம் 10ம் திகதி திரும்புகின்றனர்.

இவர்கள் மீண்டும் மார்ச் மாதம் இலங்கை வந்து தங்கள் வேலைகளை முடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் வேணி சங்கர் (இந்தியா சேர்பிளின்மோர் ஜோன்ஸ் (லண்டன்), டாக்டர் ஜோன்வில்லியம் ட்ரைன்டர் (கனடா) ஆகிய மூவருமே அந்தநிபுணர்களாவர்.

## இரு கோல்களால் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

நவாலி சென். பீற்றர் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணரைகர் கோஷ்டிக்குமிடையில் இம்மாதம் 3ந் திகதி யாழ். ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 2-0 கோல்களால் சென். பீற்றர் கோஷ்டி வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு இ. எஸ். எம். தாகிர் மத்தியஸ்தம் வகித்தார்.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

முசலி, திங்கள்

முசலிக்காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சபையினால் இவ்வருடத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் ஆரம்பமாகிறது. இதில் 22 கரபந்தாட்டக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

## மயிலிட்டி வெற்றி

மல்லாகம், திங்கள்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் 12வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. முதல் நாளன்று மயிலிட்டி கோல்டின் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும் ஈவினை பறக்கும் இளைஞர் கழகத்துக்குமிடையே நடைபெற்ற முதற்பிரிவு ஆட்டத்தில் மயிலிட்டிக்கோஷ்டி 2-1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. அருட்பிரகாசம் மத்தியஸ்தம் வகித்தார்.

தெல்லிப்பழை ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினரும், குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகத்தினரும் கலந்துகொண்ட மற்றொரு இரண்டாம் பிரிவுப் போட்டியில் தெல்லிப்பழைக் கோஷ்டி தோல்வியுற்றது. திரு. நடராசா மத்தியஸ்தராக இவ்வாட்டத்திற்குக் கடமையாற்றினார்.

## வசாவிளான் வெற்றி

மல்லாகம், திங்கள்

அச்செழு றேயல் விளையாட்டுக்கழகத்திற்கும், வசாவிளான் சையினிங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற 2ம் ஆட்டத்தில் வசாவிளான் வீரர்கள் 2-0 கோல்களால் வெற்றிபெற்றனர். திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 6—1—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 கர்னாடகஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-45 நேயர் கடிதங்கள், 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

### புதன் 7—1—70

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 கர்னாடகஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 ஞானாமிர்தம், 8-30 சைவநீதி, 9-00 செய்திச்சுருக்கம், 10-00 செய்திச்சுருக்கம், 10-03 தொழிலாளருடன், 10-30 படத்திவிருந்து, 11-00 செய்திச்சுருக்கம், 11-03 படத்திவிருந்து, 11-15 சிறுவர் மலர்.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 எங்கள்விருந்தினர், 1-00 குங்குமம், 1-30 செய்திச்சுருக்கம்.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 [illegible]

இரவு 6-15 [illegible], 6-30 பஜனை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 [illegible]

## 'எதிர்காலம் ஒளிமயமாக உடல் கட்டுக்கோப்பு அவசியம்'

திருக்கோணமலை, திங்கள்

"இன்று சிறுவர்களாக இருப்பவர்கள் வருங்காலத்தில் பெருந் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் திகழ வேண்டியவர்கள். ஓடியாடும் பெண்பிள்ளைகள் வருங்காலத்தில் நிச்சயம் தாய்மார்கள் ஆவது அதே நேரத்தில் நாட்டின் தலைவிகளா ஆகிவிட்டால் கூட வியப்படைய வேண்டியதில்லை."

லிங்கநகர ஏகாம்பரம் சனசமூகநிலயத்தின் ஆதரவில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திருமலை உள்ளூராட்சி உதவியாணையாளர் திரு. வாமதேவன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இளைஞர்கள் வாழ்க்கையில் போராடி முன்னேற வேண்டும் அப்பொழுது தான் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்றும் எதைச் சாதிப்பதாக இருந்தாலும் உடல் கட்டுக்கோப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் விபரம் வருமாறு;-

5 மைல் சைக்கிளோட்டப் போட்டி: 1) எஸ்,சிவராசா (2) ஐ. யேசுதாசன்.

நீச்சல் போட்டி: (1) ஐ யேசுதாசன் (2) திருநாதன்.

ஆண்கள் 400 யார் ஓட்டம்: (1)சோமகேசன் (2) சந்திரசேகரன்.

ஆண்கள்: 100 யார் ஓட்டம்- 1) பா. சண்முகராசா (2) அந்தோனிராசா.

பெண்கள் 100யார் ஓட்டம்: [1] வே. சரோஜினி தேவி (2) பேபி

பெண்கள்110யார்: உஷா (2)சகுந்தலா.

ஆண்கள் 200 யார் (1) மோகனாதஸ் (2)இருதயதாஸ்.

பெண்கள் 200 யார்: (1) ரபிக்கா (2) நவரஞ்ஜினி தேவி.

பெண்கள் பழம் பொறுக்கல்: (1)கமாலா (2) நளாயினி.

## 'சுடரொளி' வெளியீடு

மாவிட்டபுரம், திங்கள்

"யேசு பாலனின் ஜெயந்தியை மட்டும் மக்கள் கொண்டாடினால் போதாது. அவர் காட்டிய பாதையிலே செல்வதற்குமக்கள் தங்களை அர்பணிக்க வேண்டும்" என பாஷையூர் மக்கள்முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய ஆதரவில் திரு. ஏ. வில்சன் தலைமையில் நடைபெற்ற "சுடரொளி" வெளியீட்டு விழாவில் கலந்துரையாற்றிய கட்டளைக்குரவர் கே. பி சந்தியாப்பிள்ளை கூறினார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. அ. போல்ராஜா கே. ஏபிரகாம்லிங்கம் உட்[illegible]

## அகதிகளுக்கு உதவினர்

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சித்தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்கென புங்கங்குளத்தைச்சேர்ந்த ஏ. இராமக்கிருஷ்ணன் என்பவரால் கிளிநொச்சி எம்.பி பண்டிதர் கா.பொ. இரத்தினத்திடம் கையளிக்கப்பட்ட 100 ரூபா ரொக்கப்பணம் கிளிநொச்சி பட்டினசபைத் தலைவர் திரு. கந்தையாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்தொகைவெள்ள அகதிகளுக்குச் செலவிடப்படும்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் கலைநகர் வீதி சிரமதான முறையில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவர் திரு. நிற்சிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வேலையில் இளைஞர்களுடன் ஆசிரியர்களும் சேர்ந்து சிரமதானம் செய்துவருகின்றனர். தொடர்ந்து நேருஜீ வீதி திருத்தியமைக்கப்படவிருக்கிறது.

## தானங்களுள் சிறந்தது...

பூநகரி, திங்கள்

'தானங்களுள் சிறந்தது சிரமதானம். சிரமதானங்களுள் சிறந்தது வித்தியாதானத்துக்கு உதவும் பாடசாலை வளவைத் துப்புரவாக்கும் சிரமதானம்' என கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஆர். நடராசா ஆரியம்பொககில் பாடசாலைக்கென அரசாங்க[illegible]

## 'தலையிடாதீர்'

கோட்டை, திங்கள்

அரசாங்க உத்தியோகத்தர் நியமனங்களில் அமைச்சர்கள் எவரும் தலையிட வேண்டாம்என பிரதமர் டட்லி சேனநாயக்காநேற்று முதினம் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் வற்புறுத்தினார்.

தங்கள்உறவினர்கள், நண்பர்கள், அரசியல் வாதிகளை அரசாங்க உத்தியோகங்களில் நியமிப்பதால் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் வேலைபெறமுடியாமல் அவதியுறுவதாக பிரதமர் பேசுகையில் கூறினாராம்.

## 5வது விபத்து

பருத்தித்துறை, திங்கள்

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி, ஒரு வயலுக்குள் குடைசாய்ந்ததனால், லொறியும், ஏற்றிச் செல்லப்பட்ட பொருட்களும்சேதமுற்றன.

லொறிச்சாரதியும், கிளினரும் சொற்ப காயங்களுடன் தப்பினார்கள். இவ் விடத்தில் அண்மைக் காலத்தில் நடந்த ஐந்தாவது விபத்து இதுவாகும்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஸ்ரீ கா லிங்கன்
இணுவில்
தினசரி 630 930
பிறிப்போயா, போயா2-30 மணி
ஜெய்சங்கர்-எல்விஜயலக்ஷ்மி
நடித்த
உயிராமானமா

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
சிவாஜி-பத்மினி கே ஆர்விஜயா
நடித்த
இருமலர்கள்

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya, Pre-Poya 4 shows
George Peppard.
Inger Stevens
in
'HOUSE OF CARDS'
(Scope-Color)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
காவல் காரன்

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்
பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இல:485

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
நடித்த
வல்லவன் ஒருவன்

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

5வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மாதம் 3-ம் திகதி முதல் நான்கு தினங்கள் நடைபெறவிருக்கிறது.


இப் பொருட்காட்சியில் பிரதேச கலாமன்ற காட்சி அறையில் ஈழத்து எழுத்தாளர் வெளியிட்ட புத்தகங்களையும், காட்சிக்கு வைப்ப

தங்கள் நூல்களின் இருபிரதிகளை, பொதுச் செயலாளர், பிரதேச கலாமன்றம் கச்சேரி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளனர்.

விளான் சைபிலிங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற 2ம் ஆட்டத்தில் வசாவிளான் வீரர்கள் 2-0 கோல்களால் வெற்றிபெற்றனர். திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.


# சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் E·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.


நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரூ. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரூ. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரூ. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

8.66ம


செய்திச்சுருக்கம்,

மாலை 4-25 செய்திச்சுருக்கம், [illegible]-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 பாட்டு.

இரவு 6-15 பாமாலை, 6-30 பஜனை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-35 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-45 பாட்டு, 10-30 செய்திச்சுருக்கம்.

## மத்திய கழகம் வென்றது

மாவிட்டபுரம், திங்கள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும், அளவெட்டி அண்ணா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் 2-1 கோல்களால் வெற்றிபெற்றது.

3ம் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்ரீரங்கன், பாலு ஆகியோர் திறமையாக ஆடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. கண்ணா மத்தியஸ்தம் வகித்தார்.

## ஏழாலை-குப்பிழான் மோதின

மல்லாகம், திங்கள்

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும், ஏழாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும்கலந்துகொண்ட உதைபந்தாட்டம் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் போட்டன.

## செல்வநாயகபுரம் குழாய் நீர்

திருகோணமலை, திங்

செல்வநாயக புரத்துக்கு குழாய்நீர் விநியோகம் விரைவில் நடைபெறவிருக்கிறது.

செல்வநாயக புரத்திலுள்ள தடக்கைக் குளத்தைத் திருத்தி அக்குளநீர் மூலம் இப்பகுதி முழுவதும் குழாய்நீர் விநியோகம் செய்யப்படும். [illegible]ணி இலாகாவும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இத்திட்டத்தை துரிதமாக கவனித்து வருகின்றன. இவ்வருடம் மே மாதமளவில் நீர்விநியோகம் ஆரம்பமாகும்.

தலைமையில் நடைபெற்ற "சுடரொளி" வெளியீட்டு விழாவில் கலந்துரையாற்றிய கட்டளைக்குரவர் கே. பி சந்தியாப்பிள்ளை கூறினார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. அ. போல்ராஜா கே. ஏபிரகாம்லிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## திருநெல்வேலி கலாமன்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருநெல்வேலி கலாமன்ற மாணவர் தேர்ச்சிச்சங்கத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-சு. கெங்காதரன் உபதலைவர்:- க. விஜயேந்திரன், காரியதரிசி--க. பரமநாதன், உபகாரியதரிசி:- பொ. விஜயரத்தினம். தனாதிகாரி:-இ சத்தியசிலன், உபதனாதிகாரி:-ந சற்குணராசா நூல்நிலையப்பொறுப்பாளர்: சி. ஜெயசீலன் பத்திராதிபர்:-வே. பாலசுப்பிரமணியம், உபபத்திராதிபர்:-பொ. சண்முகநாதன்

13 பேர்கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

இமையாணன், திங்கள்

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள்களாகக் கடமையாற்றிய ஆறு பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எச். எம். டி. குணவர்த்தனா தலைமன்னாருக்கும், பெர்னான்டோ - பளைக்கும், பி எஸ். பெரேரா, பிரான்சிஸ்- ஊர்காவற்றுறைக்கும், வீரசூரியா - கிளிநொச்சிக்கும், சதார் டீன் - சாவகச்சேரிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய விஜயதுங்கா, கலேவெல, பொடிகாலகாமய, சீமன்சின்யோன், முனசிங்க, ஆனந்த சில்வா ஆகிய ஆறு பேரும் வல்வெட்டித்துறைக்கு இடமாற்றலாகி வந்துள்ளனர்.

0 0 0

மன்னார், திங்கள்

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக, கொழும்பு பொலிஸ்நிலையத்தைச்சேர்ந்த ஜனாப் நிஸாம் மாற்றலாகியுள்ளார்.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலயத்தில் வர்த்தக ஆசிரியராக கடமையாற்றிய பிரம்மஸ்ரீ சேசிவ சுப்பிரமண்ய சர்மா இம்மாதம் முதல் சுழிபுரம் விக்டோறியா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

தே (. நி)

களுள் சிறந்தது வித்தியாதானத்துக்கு உதவும் பாடசாலை வளவைத் துப்புரவாக்கும் சிரமதானம்' என கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஆர். நடராசா ஆரியம்பொகலில் பாடசாலைக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட காணியை காடழித்துத் துப்புரவாக்கும் சிரமதான இயக்கத்தை ஆரம்பித்து வைத்தபோது குறிப்பிட்டார்

காணிப் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். நாகேஸ்வரன், கிராமசேவகர் திரு த. சதாசிவம், தலைமையாசிரியர் திரு. க. வீரகத்திப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

வல்வெட்டித்துறை

## கோஷ்டியினர் வெற்றி வீரரயினர்

பருத்தித்துறை, திங்கள்

வதிரி தமிழ்மன்ற ஆதரவில் செல்வன் ஆ. கந்தசாமி ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் வல்வெட்டித்துறைக் கோஷ்டிக்கும் நெல்லியடி ஸ்பேஸ் கோஷ்டிக்குமிடையில் நடந்தபோது வல்வைக் கோஷ்டி 3 - 0 கோல்களால் வெற்றியீட்டியது.

இரத்தினசிங்கம்பெனடிக்ற் ஸ்ரீதரன், ஆனந்தன் கணேசமூர்த்தி ஆகியோர் திறமையாக விளையாடினர்.

திரு எஸ். இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். வெற்றி வீரருக்கான கேடயம் இம்மாத நடுப்பகுதியில் வழங்கப்படவிருக்கிறது.


5வது வெற்றி வாரம்

# வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

# திருவருட்செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

# யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா

மற்றும்பலர் நடித்த

# அஞ்சல்பெட்டி 520


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் ஒரு நாடு என்பதை அரபுக்கள் அங்கீகரிக்கவேண்டும்

## பிரிட்டிஷ் தொழிற்கட்சித் துணைத்தலைவர் ஜோர்ஜ் பிரௌன் யோசனை

### மேற்காசிய அமைதிக்கு நாஸர் வழிகாட்டலாம்

கெய்ரோ, ஜனவரி 5

**இஸ்ரேல் என்ருெரு நாடு இருப்பதை அரபுக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அதேசமயம் இஸ்ரேலியரும் கைப்பற்றியுள்ள அரபுப் பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டும்.**

**இவ்வாறு பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் துணைத்தலைவர் திரு. ஜோர்ஜ் பிரௌன் ஐக்கிய அரபுக்குடியரசு தேசிய சபை உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.**

மேற்காஸிய நிலைமைகளை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக திரு. பிரௌனும் குழுவினரும் இங்கு விஜயம் செய்திருக்கிருர்கள். பின்னர் அவர்கள் இஸ்ரேலுக்கும் போகவிருக்கிருர்கள்.

நான்கு வல்லரசுகளும் தமது சொந்தத் திட்டம் எதையும் புதிதாக மேற்காஸியாவில் புகுத்த முனையவில்லை. பாதுகாப்புச்சபைத் தீர்மானத்துக்கமையவே அவர்கள் மேற்காஸியாவில் அமைதிக்கு முயற்சி செய்கிருர்கள் என்ருர் திரு. ஜோர்ஜ் பிரௌன். பாதுகாப்புச்சபைத் தீர்மானம் அமுலாக்கப்பட வேண்டுமென்பதையே பிரிட்டனும் விரும்புகின்றது என்ருர் அவர். அதிபர் நாஸர் மேற்காஸிய அமைதிக்கு முன்மாதிரியான நடவடிக்கைகள் எடுத்துதவவேண்டும் என்று திரு. பிரௌன் கேட்டுக்கொண்டார்.

திரு. ஜோர்ஜ் பிரௌன் அதிபர் நாஸரை சந்தித்துப் பேசினுர். மீண்டும்ஒரு முறை அவர் நாஸரை சந்திக்கவிருக்கிருர்.

### பிரான்ஸ் மீது இஸ்ரேலியர் சீற்றம்

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதில்லையென்று தடைவிதித்துவிட்டு அரபு நாடுகளுக்கு பிரான்ஸ் ஆயுதங்கள் கொடுப்பதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியிருக்கின்றது. இஸ்ரேல் மந்திரிசபை ஜெருசலத்தில் கூடி ஆலோசித்த பின்னர் இக்குற்றச்சாட்டை வெளியிட்டது.

லிபியாவுக்கு பிரான்ஸ் [illegible]

குடியரசு விமானப்படையினருக்குமிடையில் நேற்றுக் கடுமையான மோதல் இடம்பெற்றது. இஸ்ரேலிய விமானங்களை வழிமறித்த எகிப்திய விமானங்கள் இரண்டைச் சுட்டுத்தள்ளியதாக இஸ்ரேலியர் கூறினுர்கள்.

இஸ்ரேல் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதாகவும் [illegible]

### சுசிலாவுக்கு பாராட்டு

சென்னை ஜன. 5

சிறப்பு சினிமாப் பின்னணி பாடகிக்கானமத்திய அரசின் விருது பெற்ற பி. சுசீலாவுக்கு பாராட்டுத்தெரிவிக்கும் நிகழ்ச்சியொன்று சென்னையில் நடைபெற்றது.

பிரபல வட இந்திய பின்னணிப் பாடகிலதா மங்கேஷ்கார் சுசீலாவுக்கு பொன்னுடை [illegible]

### 'ஜீவனும்சம்' லட்சுமிக்கு திருமணம்

சென்னை, ஜன. 5

சினிமா நடிகை லட்சுமிக்கும் இன்சூரன்ஸ் கம்பனியில் வேலைபார்க்கும் பாஸ்கருக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டுள்ளது. இருவரும் ஏற்கனவே காதலித்து வந்தவராயினும் பெற்ருேர்களின் சம்மதத்துடனேயே இத் திருமணம் நடைபெறவுள்ளது.

### இந்தி பற்றி மத்திய மந்திரி

சென்னை, ஜன. 5

பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியாகவும் வடநாட்டில் ஆட்சி மொழியாகவுமுள்ள இந்தி மொழியை அனைவரும் படித்துத்தாளுக வேண்டும்' என புதுடில்லி மந்திரி திரு. வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிட்டுள்ளார்.

### புகலிடம் கோரும் செக். பிரயாணிகள்

ரோம், ஜன. 3

சுமார் 30 செகோஸ்லவாக்கிய பிரஜைகள் இத்தாலியில் அடைக்கலம் கோரியிருக்கிருர்கள். இத்தாலியில் உல்லாசப் பிரயாணத்துக்காக வந்தவர்கள் இவர்கள். மிலானிலுள்ள அரசாங்க அலுவலகத்திலுள் திடீரென்று பிரவேசித்த இவர்கள் தங்களுக்கு அடைக்கலம் தரும்படி கோரினுர்கள், இதுவரை டென்மார்க்கிலும் ஸ்வீடனிலும் 100க்கு மேற்பட்ட செக்கோஸ்லவாக்கியர்கள் தஞ்சம் புகுந்திருக்கிருர்கள். இவர்கள் அனைவருமே உல்லாசப் பிரயாணத்துக்காக வெளிநாடு வந்துள்ளவர்கள்.

### உடன் கட்டை ஏறிய சீடன்

புதுடில்லி, ஜன 5

[illegible] உடன் கட்டை ஏறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தமது குரு[illegible]ன [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காந்திஜி சொன்னதைக் கேட்காதவர்களா நான் சொன்னதைக் கேட்பார்கள்?

#### காங்கிரஸ்காரர்கள் பற்றி எல்லைக்காந்தி வருத்தம்

திருச்சி. ஜன. 5

காங்கிரஸ்கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை நீக்கி மீண்டும் ஒற்றுமை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்க எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் மறுத்து விட்டதாகத் தெரிகின்றது. காந்தியின் யோசனையையே கேட்காத காங்கிரஸ் காரர்கள் நான் சொல்வதை எங்கே கேட்கப் போகிருாகள் என்று அவர் கூறியிருக்கிருர்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன், கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொண்ட போது இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது.

நாட்டிலிருந்து ஆங்கிலத்தை அகற்றுவது சிரமம் என்றும் அவர் சுட்டிக் காட்டியதாகத் தெரிகிறது.

நாட்டில் இரண்டு காங்கிரஸ் கட்சிகளிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சியை எல்லைக்காந்திமேற் கொள்ள வேண்டுமென்று கரூரைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ்ஊழியர் எல்லைக்காந்தியைக் கேட்டுக்கொண்டார்.

ஏழைகளுக்குப் பணிபுரிய வேண்டும் என்பதற்கான போட்டியில் பிளவு ஏற்பட்டிருந்தால் காங்கிரஸ் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்று எல்லைக் காந்தி கூறினுர், ஆனுல் பிளவுக்கு அதிகாரப் போட்டியே காரணம் என்ருர். காந்தியின் யோசனையையே கேட்காத காங்கிரஸ் காரர்கள் நான் சொல்வதை எப்படிக் கேட்கப் போகிருர்கள் என்றுஎல்லைக் காந்தி கேட்டார்.

ஏழை மக்களுக்கு நிலம் அளிக்கப்பட வேண்டும் என்று எல்லைக்காந்தி கூறியதாகத் தெரிகிறது. நிலச் சொந்தக் காரர்கள் கொடுமைப் படுத்திஞல் சாத்வீக முறையில் சத்தியாக் கிரகம் செய்வதை ஆதரிப்பதாக அவர் கூறினுர். ஆனுல் வன்முறையே கூடாது என்ருர்.

மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண எல்லைக் காந்தி தம்முடைய செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று ஒருவர் கூறினுர்.

வட்டார மொழிகளை அபிவிருத்தி செய்வது அந்தந்த மாநிலஅரசுகள், மக்கள் ஆகியோரின் பொறுப்பு என்று எல்லைக்காந்தி கூறினுர். ஆங்கிலத்தை நாட்டிலிருந்து அகற்றுவது சிரமம் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

மத்திய, மாநில அரசுகள் வேலையின்மை பிரச்னையைத் தீர்க்கும் என்று எதிர் பார்ப்பதில் பிரயோஜனமில்லை என்று எல்லைக்காந்தி கூறினுர். அனைவருக்கும் வேலையளிப்பதும் ஏழைகளுக்கு உணவு அளிப்பதும் சமுதாயத்தின் கடமையாகும் என்ருர்.

### இந்திராவை எதிர்த்துப்பேசினுர்

#### மாணவர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜன. 5

''பிரதமர் இந்திராகாந்தி பதவியில் நீடித்து இருக்க வேண்டுமென்ற ஆசையினுல் கம்யூனிஸ்டுகளுடனும், திராவிட முன்னேற்றக்கழகத்துடனும் நட்புறவு பாராட்டுகிருர். ரஸ்யாவுக்கு மாணவ சமுதாயத்தை விற்க முயல்கிருர்'' என சின்டிக்கேட் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த தாரா கே சுராசிங் மத்திய பிரதேசத்தில் உற்றயினியில் உள்ள கல்லூரி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்பேச்சினுல் ஆத்திரமடைந்தமாணவர்கள் மேற்கொண்டும் அவரைப்பேசவிடாமல் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் கறுப்புக்கொடியும் காட்டினர்.

### 500 சாகித்தியங்களை சிவன் இயற்றியுள்ளார்

சென்னை, ஜன. 5

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைடியின் சார்பில் தியாகராய நகர் வாணி மஹாலில் நடைபெற்ற சதஸ்ஸில் சாகித்திய கர்த்தா பாபனுசம் சிவனுக்கு ''சங்கீத சாகித்திய சிகாமணி'' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. இந்த விழாவிற்கு திரு. வி. எம் பெருமாளுர் செட்டி தலைமை தாங்கினுர்.

சொஸைடியின்காரியதரிசி திரு. என். ராமச்சந்திரன் திரு. பாபனுசம் சிவனைப் பற்றிக் குறிப்பிடுகையில், இதுவரை அவர் 500 சாகித்யங்களையும் இயற்றிருப்பதாகவும், இசையைப் பக்திமார்க்கத்திற்குப் பயன்படுத்தியவர் என்றும் கூறினுர்.

இசைத்துறையில் ஞானத்தை வளர்த்துக் கொள்வோருக்கு ஊக்கமளிப்பதே இந்த சொஸைடின் நோக்கமாகும் என்று தலைவர் திரு. எம்பெருமாளுர் செட்டி கூறினுர்.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. பாபனுசம் சிவன் பரிசுகள் வழங்கினுர்.

...

### பதவியா குளம்

திருகோணமலை, திங்

பதவியாக்குளத்தில் நீர்மட்டம் அளவுக்கதிகமாக உயர்ந்திருப்பதால் பதவியா கிராமமக்களும் தென்னைமரவடி கிராம மக்களும் பீதியடைந்துள்ளனர். தொடர்ந்து மழை பெய்தால் பதவியாக்குளத்தின் அணை முறிக்கப்படலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.



கொடுப்பதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியிருக்கின்றது. இஸ்ரேல் மந்திரிசபை ஜெருசலத்தில் கூடி ஆலோசித்த பின்னர் இக்குற்றச்சாட்டை வெளியிட்டது

லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுதங்கள் விற்றிருப்பது சம்பந்தமாகவே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளனர். கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களையே கௌரவிக்கப் பிரான்ஸ் மறுக்கின்றது என்று இஸ்ரேலியர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பிரான்ஸிலுள்ள இஸ்ரேலிய வர்த்தகக் குழுத் தலைவர் அட்மிரல் லிமோன் என்பவரைத் திருப்பியழைக்கும்படி பிரான்ஸ்கேட்டிருப்பதையும் இஸ்ரேல் குறை கூறியிருக்கின்றது. ஐந்து பீரங்கிப்படகுகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இஸ்ரேல் சட்டவிதிகள் எதையும் மீறவில்லையென்றும், இஸ்ரேலிய ராஜதந்திரிகளைத் திருப்பியழைக்கும்படி கோரியிருப்பது அநீதியாகும் என்றும் இஸ்ரேல் குறிப்பிட்டிருக்கின்றது.

**விமானச் சண்டை**

இஸ்ரேலியவிமானப்படையினருக்கும் ஐக்கிய அரபுக் குடியரசு விமானங்களை வழிமறித்த எகிப்திய விமானங்கள் இரண்டைச் சுட்டுத்தள்ளியதாக இஸ்ரேலியர் கூறினர்கள்.

இஸ்ரேல் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதாகவும் இன்னுமொன்றைச் சேதப்படுத்தியதாகவும் எகிப்தியர் கூறினர்.

எகிப்தியர் கூற்றை இஸ்ரேலியர் மறுத்தனர். இந்த விமானம் நேராகவே சுடப்பட்டு ஆகாயத்திலேயே வெடித்து வீழ்ந்ததாகவும் அதன் படங்களை வெளியிடமுடியுமென்றும் எகிப்தியர் அறிவித்துள்ளனர்.

லெபனன் கிராமமொன்றிலிருந்து அண்மையில் இஸ்ரேலியர் கடத்திச் சென்ற லெபனன் மக்களை விடுவிக்க உதவும்படி செஞ்சிலுவை இயக்கத்தினர் கோரப்பட்டிருக்கின்றனர். ஏற்கனவே இஸ்ரேலிய காவலாளி ஒருவர் அரபுகொமாண்டோக்களினால் கடத்திச் செல்லப்பட்டதற்கு எதிராகவே இவர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது இவர்களில் மூவரை விசாரணைக்குப்பின் இஸ்ரேலியர் விடுவித்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

# கேரள அமைச்சரைக் கொல்ல முயற்சி

திருவனந்தபுரம், ஜன. 5

கேரள உள்துறை அமைச்சர் திரு. முகம்மது கோயாவைக் கொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி குறித்து பொதுமக்கள் பலரும் தலைவர்களும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

ராஜ்ய முதலமைச்சர் திரு அச்சுதமேனன் இந்தச் சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் தாம் அதிர்ச்சியடைந்ததாகக் கூறினார். நாட்டில் நீதிமான்கள் அனைவருமே இதனைக் கண்டிக்க வேண்டும்என்றார் அச்சுதமேனன்.

இந்தச் சம்பவத்துக்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்று மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்திருக்கிறது. ஆனால் திரு கோயாவைக் கொலை செய்ய முயற்சி செய்தவர் ஒரு மார்க்ஸீயக் கம்யூனிஸ்ட் ஊழியர் என்று கூறப்படுகின்றது. இது சம்பந்தமாக கோயாதாராமாரார் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. கோயாமீது திராவக பல்ப் வீசப்பட்டதாகவும் ஆனால் அவர் சிறுகாயங்களுடன் தப்பி விட்டதாகவும் கூறப்படுகின்றது. திராவக பல்பை வீசிய நபரை அமைச்சரின்மெய்ப் பாதுகாவலர் பாய்ந்து இறுகப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர் திரு கோபாலன்கருத்து தெரிவிக்கையில் தனி நபர்களை தாக்குவதை தமது கட்சி விரும்பவில்லையென்றார். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கேரள அமைச்சர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளன.

— —

கனடா

## தீவிபத்தில் 19 பேர் பலி

ஒட்டாவா ஜன. 5

கனடாவில் மொன்றியாட் நகருக்கருகில் ஏற்பட்ட தீவிபத்தொன்றில் ஏறத்தாள 19 பேர் பலியாகியிருப்பார்களென்று அஞ்சப்படுகிறது. மொன்ட்ரியாலுக்கு சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் இத் தீவிபத்து ஏற்பட்டது.

சென்னையில் நடைபெற்றது.

பிரபல வட இந்திய பின்னணிப் பாடகிலதா மங்கேஷ்கார் சுசீலாவுக்கு பொன்னாடை போர்த்தினார். முதலமைச்சர் கருணாநிதி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

தற்கொலை செய்த குடும்பம்

## சடலங்கள் வடநாட்டில் அடக்கம்

சென்னை, ஜன. 5

சென்னையைச் சேர்ந்த புகையிரத ஊழியர்களும் அவர்களுடைய பிள்ளைகளும், மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள சிர்தி என்ற இடத்தில் தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இறந்தவர்களில் மூத்த மகள் பி. எஸ். ஸி. பரீட்சையில் தேறியவரென்றும் மற்றவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவர்களென்றும் செய்தி கிடைத்துள்ளது.

சென்னைக்கு அவர்களுடைய சடலங்களை கொண்டு வர முடியாமலுள்ளதாக தெரிவித்தையடுத்து சடலங்கள் வடநாட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டன

— —

## ...தி விசாரணை நடாத்தப்படும்

பம்பாய், ஜன. 5

'தேர்தல் சின்னத்தையும் கட்சிக் கொடியையும் யாருக்கு ஒதுக்குவது என்பது குறித்து நீதி விசாரணை நடாத்தி முடிவு செய்யப்படும்.

காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்து விட்ட பின்பு தேர்தல் சின்னத்துக்கும், கட்சிக் கொடிக்கும் போட்டி போடுவதைத் தொடர்ந்து தலைமைத் தேர்தல் அதிகாரி சென்வர்மா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

— —

## சமாதிசபையின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், தி.

இம்மாதம் 14-ம் திகதி சதாநிஸ்ட் பொன்னப்பாச் சாமியார் சமாதி பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் ஓட்டுமட வீதியிலுள்ள சமாதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

# ... ஏறிய சீடன்

புதுடில்லி, ஜன 5

குருவுடன் சீடன் உடன்கட்டை ஏறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தமது குருவான ஸஜ்ஜன்சிங்கின் தகனத்தின்போது, சங்கத் சிங் (40 வயது) திடீரென்று தீக்குளிப்பதை 5000பேர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஏராளமான சீடர்கள் உள்ள சீக்கிய குருசந்த் ஸஜ்ஜன்சிங் முதல் திகதி காலமானார். அவர் சடலம் சிதையில் எரிந்து கொண்டிருந்தது. சங்கத் சிங் திடீரென்று கூட்டத்திலிருந்து குதித்தோடி குருவுடன் உடன்கட்டை ஏறிவிட்டார். அவரை மீட்க முயன்றது வீணாகியது. தீமீதுபாய்ந்த மறுகணமே தீ அவரை விழுங்கியது.

# நர்ஸ் அறைக்குள் மந்திரி புகுந்தாராம்

## புகாரைத் தொடர்ந்து ராஜினுமா

போபால், ஜன 5

சென்ற சில தினங்களுக்கு முன்பு கனரக மின்கலங்கள் தொறிற்சாலை நகரமைப்பில்ஒரு தாதியின் அறையில் நடந்த சம்பவமொன்றில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் மத்திய பிரதேச தொழிலாளர் நலமந்திரி திரு. கங்காரசும்திவாரி தமது மந்திரிப் பதவியை ராஜினுமா செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கஸ்தூரிபா மருத்துவமனையின் தாதி செல்வி ஸி. எஸ். மாசின் இவரது தகாத நடத்தைபற்றிப் பொலிசில் புகார் செய்தார். பின்பு புகாரை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பிரமாண மனுவின் மீது வாபஸ் பெற்றுக் கொண்டார்.

சிலதொழிலாளர்களின் தலைவர்கள்கூட தாதியின் புகார் சரியானதென்று கூறி மறுநாள் தாதிகள் விடுதியிலிருந்து பொலிசார் மந்திரியைக் மீட்டதாகக் கூறியுள்ளனர்.

## 'விவசாயப்படை வீரர்களை திரும்ப அழைக்கவும்

யாழ்ப்பாணம்,செவ்வாய்

பெருவெள்ளம் காரணமாக வீட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட விஸ்வமடு விவசாயப்படை வீரர்களை உடனடியாகத் திரும்ப அழைத்து வேலை வழங்குமாறு கிளிநொச்சி எம்.பி திரு.கா.பொ. இரத்தினம் தலைமை அதிகாரியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏனைய காலங்களில் வேலையை வாங்கிவிட்டு,இந்தக் கஷ்டமான காலத்தில் தங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தது அநியாயம் என விவசாயப்படை வீரர்கள் திரு இரத்தினத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து,அவர் இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டார். வீட்டில் தங்கிய காலத்துக்கும் சம்பளம் வழங்க வேண்டுமென அவர் வற்புறுத்தியுள்ளார்.

— —

## இந்திய நீச்சல்வீரர் முதலிடம்

புதுடில்லி, ஜன. 5

வருடாவருடம் உலகசாதனைகளை ஏற்படுத்தியவர்களின் பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளியானது. உலகிலேயே நீண்டதூரம் நீந்திய சாதனையை இந்தியாவைச் சேர்ந்த பிரபல நீச்சல்வீரர் மிஹிர்ஸென் நிலைநாட்டியுள்ளார்.


1966-ம் ஆண்டில்பனுமாக் கால்வாயையும், பொஸ்பொரஸ் நீரிணையையும்நீந்திக் கடந்த திரு. ஸென், பாக்குநீரிணையை 25மணித்தியாலம் 36 நிமிடங்களிலும் ஜி ரால்டர் நீரிணையை 8 மணித்தியாலம் ஒரு நிமிடத்திலும், டார்னெல் லஸ்நீர்ப் பகுதியை 13 மணி 55 நிமிடங்களிலும், பனுமாக்கால்வாயை 33 மணி 15 நிமிடங்களிலும் நீந்திக்கடந்துள்ளார் என அந்தப் புள்ளி விபரம் கூறுகிறது.

— —

கோட்டை, திங்கள்

நாட்டின் பல பாகங்களிலும் வெள்ளத்தால் இறந்தவர்கள் தொகை 49 ஆக அதிகரித்திருப்பதாக தெரியவருகிறது.


இனும்! இனும்!! இனும்!!!






1. 'விங்க்' Vink மை உபயோகிப்பவர்களுக்கு 100க்கு மேற்பட்ட பரிசுகள் காத்திருக்கின்றன.
2. 1ஆம் பரிசு : 'றலி' சைக்கிள்.
   2ஆம் பரிசு : கைக் கடிகாரம்.
   3ஆம் பரிசு : மண்ணெண்ணை அடுப்பு.
   4ஆம் பரிசு : மின் மேசை விளக்கு.
   5ஆம் பரிசு : 'எவர்சில்வர்' கோப்பைகள்.
   அடுத்த 40 பரிசுகள் : 40 'கோயா' பவுடர் டப்பாக்கள்.
   அடுத்த 60 பரிசுகள் : 60 'ரேக்கிஷ்' துவாய்கள்.
3. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு இரண்டு அவுன்சு 'விங்க்' மைப் போத்தல் உள்ள பெட்டியையும் பேணி வைத்திருங்கள். அந்த ஒவ்வொரு பெட்டி மூடியின் உட்புறத்திலும் ஒவ்வொரு எண் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த எண் உங்களுக்கு ஒரு பரிசைப் பெற்றுத்தரக்கூடும்.
4. 1970 ஏப்ரில் மாதம் 27ஆந் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (லிமிடெட்) மேல்மாடியில் (420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) பரிசுக்குரிய எண்கள் தெரியப்படும்.
5. அடுத்தநாள், அதாவது 28-4-1970 செவ்வாய்க்கிழமை, வெளியாகும் 'ஈழநாடு' பத்திரிகையிலே பரிசுக்குரிய எண்கள் பிரசுரிக்கப்படும்.
6. 12-5-1970 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பரிசுபெறத் தகுதியுடைய மைப் பெட்டியை ஷெ சங்கக் காரியாலயத்திலே கொடுத்து உரிய பரிசைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. பரிசுகள் யாவும் 15–12–1969 முதல் ஷெ சங்க நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்படும்.
8. இப் பரிசுத்திட்டம் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஷெ சங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. 'விங்க்' இரண்டு அவுன்சு மைப் போத்தல்கள் வாங்கக்கூடிய இடங்கள் :–
   - யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (லிமிடெட்), 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   - கிளைகள் : 150, ஆஸபத்திரி விதி, யாழ்ப்பாணம் ; 17, பிரதான வீதி, யாழ்ப்பாணம் ; சுன்னுகம் ; பருத்தித்துறை ; சாவகச்சேரி ; கிளிநொச்சி ; கொழும்பு.
   - மற்றும் பிரபல கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக்கொள்ளலாம்.
10. ஷெ பரிசுத் திகதியாகிய 27-4-1970 வரை மாத்திரம் 'விங்க்' இரண்டு அவுன்சு மைப் போத்தல்கள் மிகக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

ஆரம்ப விலை போத்தல் ஒன்றுக்கு ரூ. 1-10.

11. இலங்கையினதும் இங்கிலாந்தினதும் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படும் சிறந்த மை

'விங்க்' Vink

ஆகையால் வாங்கும்பொழுது Vink அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

விங்க் வாங்கி | பெட்டிகள் சேர்த்து | பரிசுகள் பெறுங்கள்

தயாரிப்பாளர் :
வெள்ளியம்பதி,
அளவெட்டி.

விநியோகஸ்தர் :
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (லிமிடெட்),
420, ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத் தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல, உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும், தீரத்தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும். உன் இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும் இது சத்தியம். அனுபவத்திலே பார்.— பாரதி



# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 22-ந் திகதி (6-1-70)


## வகுப்புவாதத்துக்கு முழுக்கு

தீவிர வகுப்பு வாதப் போக்கை கைவிடுவதென்றும் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு நேசக்கரம் நீட்டுவதென்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேலிடம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இச் செய்தி உண்மையானால் இது சிறுபான்மை இனத்தவருக்கு மட்டுமல்ல இந்த நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட அனைவருக்குமே மகிழ்ச்சியளிக்கும். இதே சமயம் அடுத்த தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி பீடத்தில் அமர்வதற்கான ஒரு தந்திரமாக இது இருக்கக்கூடாது என்ற கவலையுமேற்படாமலிருக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உயர் தலைவர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்திலேயே இந்தமுடிவு மேற் கொள்ளப்பட்டிருக்கிறதாம். இதன்படி எதிர்க்கட்சிக் கூட்டணியின் பொதுக் கொள்கைத் திட்டத்திலும் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மாறுதல் இருக்குமென்றும் அச் செய்தி கூறுகிறது.

0 வடக்கிலும் கிழக்கிலும் இரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகங்களை நிறுவுவது தமிழ்மொழிச் சட்டத்தைக் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயகா விரும்பியபடி அமுல் நடத்துவது.

0 தோட்டப்பாடசாலைகளைத் தேசியமயமாக்குவது என்பன அந்தக் கூட்டத்தில் செய்து கொள்ளப்பட்ட சில முடிவுகளாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் [illegible]

தீவிர வகுப்புவாதப்போக்கை கைவிடத் தீர்மானித்திருப்பதாக நம்பலாம். ஆனாலும் தீர்மானம் நிறைவேற்றுவதாலும் தேர்தல் விஞ்ஞாபனத்தை மாற்றியமைத்து சிறுபான்மைச் சமூகத்தினருக்கு குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு வாக்குறுதிகளை அளிப்பதாலும் பயன் கிடைத்துவிடாது வாக்குறுதிகளை நம்பிக் கெட்டவர்கள் தமிழ்பேசும் மக்கள் எதையும் செயலில் நிறைவேற்றிக் காட்டாதவரை அவர்கள் நம்பத் தயாராயிருப்பார்களென நம்புவதற்கில்லை. வகுப்புவாதத்தைக் கிளப்புவதன் மூலமே தேர்தலில் வெற்றி பெறலாமென்றும் ஆட்சிபீடத்தில் அமரலாமென்றும் நம்பிக்கையுடையவர்கள் இந் நாட்டிலிருப்பதால் ஒரு கட்சி வகுப்புவாதத்தைக் கைவிட்டாலும் மற்றொரு கட்சி வகுப்புவாதத்தைக் கைதூக்கி விடக் காத்திருக்குமென்று கடந்தகால அனுபவங்களைக் கொண்டே சுலபமாகச் சொல்லிவிடலாம்.

இந்த நாட்டிலிருந்து வகுப்புவாதத்தை ஒழித்துக் கட்டி தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி நாட்டை முன்னேற்ற வேண்டுமென்ற விருப்பம் உண்மையாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கோ, எதிர்க்கட்சிக் கூட்டணியினருக்கோ, அல்லது ஆளும் கட்சியினருக்குத்தானும் இருக்குமானால் தீர்க்கமான, உறுதியான சில நடவடிக்கைகளை அவர்கள் துணிச்சலுடன்கூட்டாக மேற்கொள்ள முடியும்:

சிறுபான்மைச் சமூகத்தினருக்கு இதுவரைசட்ட ரீதியாகவும் நிர்வாகரீதியாக [illegible]

# "இலங்கைத் திராவிட பல்கலைக் கழகம் எனப் பெயரிடுக"

**தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவாவும் தனது கருத்துக்களை வெளியிட்டுத் தேசிய உயர்கல்விச் சபைக்கு மகஜர் ஒன்றையனுப்பியுள்ளார். அம்மகஜரில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இங்கு இடம்பெறுகின்றன.**

தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கும் பட்சத்தில் முதலாவதாக இக்கருத்துக்களைத் தமிழ் மக்களிடம் கோருவதற்குக் காரணமாகவுள்ள தமிழ் பல்கலைக்கழகமா அல்லது இந்துப் பல்கலைக்கழகமா என்றபிரச்னை பற்றி ஆராய்வோம். தமிழ் மக்களின் இருபெரும் கட்சிகளான தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளிடையே மேற்படி பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது தமிழருக்குப் பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக தமிழரசுத் தலைவர்களது கருத்துக்களையோ அல்லது தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களது கருத்துக்களையோ ஏற்று அவைகளையே முடிந்த முடிவுகளாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவர்கள் இவ்விடயத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், உயர்பட்டப்படிப்பு மாணவர்கள் அல்லது பல்கலைக்கழகத்தோடு சம்பந்தப்பட்ட அறிவாளிகள் போன்றோ அனுபவம் வாய்ந்தவர்களல்ல. இது மட்டுமன்றி இவ்விடயத்தில் இதுகாலவரை மக்கள் எப்பொழுதாவது தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு மேற்படி தலைவர்களுக்கு உரிமையளிக்கவில்லை.

இந்த மகஜரில் நான்தெரிவிப்பது என்னவெனில் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அதில் தமிழ் கலாச்சாரக் கல்விக்கு தனியானதொரு விசேஷ பிரிவு அமைக்கப்பட வேண்டும். அத்துடன் பூரண மதசுதந்திரம் இருக்க வேண்டும். இப் பல்கலைக்கழகத்துக்கு இலங்கைத் திராவிட பல்கலைக்கழகமெனப் பெயரிடலாம். தமிழ்மக்கள் திராவிட கலாசாரத்தவர்களாதலால் அக்கலாச்சாரத்துக்கு முக்கியத்துவம் கொடுப் [illegible]

இதில் மாணவர்கள் பெறும் புள்ளிகள் முதல் பிரிவு, இரண்டாம் பிரிவு சித்திகளுக்குக் கணிக்கப்பட வேண்டும்.

### நிலையம்

பிரஸ்தாப பல்கலைக்கழகத்தின் தலைமைக் காரியாலயங்களையும் நிர்வாகப்பகுதியையும் மட்டக்களப்பில் அமைத்து அத்துடன் அவ்விடத்திலேயே விவசாயப் பிரிவையும் பல மொழிகள் பற்றிய கல்வி, தமிழர் கலாச்சாரம் பற்றிய கல்வி ஆகியவற்றிற்கான பிரிவையும் அமைத்தல் வேண்டும். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் வைத்தியப்பகுதியை யாழ்ப்பாணத்திலும், காங்கேசன்துறையில் பொறியியல் பிரிவையும், திருக்கோணமலையில் விஞ்ஞானப் பிரிவையும், முல்லைத்தீவில் மிருக வளர்ப்பு, மிருகவைத்திய பிரிவையும், இரத்மலானையில் கைத்தொழிற் பிரிவையும் அமைக்கலாம். பல்வேறு மொழிகள், தமிழர் கலாச்சாரம் ஆகியவற்றின் கல்விப் பிரிவு தனியே அமைக்கப்படுவதால் கலைக்கென ஒரு பிரிவும் கீழைத்தேசக்கல்விக்கென ஒருபிரிவும்தேவையில்லை.

### அமைப்பளவு

பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வில் தகுதிபெற்ற சகல தமிழ் மாணவர்களையும் அனுமதிக்கத்தக்க அளவு மேற்கூறப்பட்ட பல்கலைக் கழகப் பிரிவுகள் பெரியனவாக அமைய வேண்டும். பல்கலைக்கழகம் நிறுவிய 10 அல்லது 15 வருட காலப் பகுதிக்குள் 20,000 மாணவர்களை அனுமதிக்கத் திட்டமிட்டுக் கணிக்கப்பட வேண்டும்

### மாணவர்களை அனுமதித்தல்

மாண [illegible] கழகத்து [illegible] விடயத்தில் அவர்களின் [illegible]

### கூட்டுக்கல்வி

பல்கலைக்கழகத்துக்கு ஆண் பெண் இருபாலாரும் அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கு கடும்ஒழுங்கு விதிகள் விதிக்கப்பட்டு தேவையான சந்தர்ப்பங்களின் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

### தமிழ் கலாசசாரம்

தமிழ்க் கலாச்சாரத்துக்கு இப்பல்கலைக்கழகத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டியதவசியம். தமிழ்க் கலாச்சாரக் கல்விக்கென நிறுவப்படும் பிரிவில் தமிழ் வளர்ப்பதற்கு ஏற்ற விரிவுரைகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் விழாக்கள், நூல் பிரசுரங்கள்முதலியன இடம் பெறுதல் வேண்டும்.

### தேசியசேவை

ஆண் பெண்இருசாராரும் இப்பல்கலைக்கழக விடுமுறைக் காலங்களில் தேசிய சேவையிலீடுபட்டு சேவை செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். கட்டாயமாகஒரு தேசியசேவைத் திட்டம்வகுக்கப்பட்டு தேசியசேவைக் கல்வி இம்மாணவர்களுக்கு அளிக்கப்படுவதுமட்டுமன்றி செயல்முறையிலும் சமூக சேவைகளில் ஈடுபடவும் தொழில் அனுபவம் பெறவும் உதவிசெய்யவேண்டும்.

மேற் குறிப்பிடப் பட்டவற்றைவிட விளையாட்டு, பத்திரிகைத் தொழில், வங்கித்துறையில் ஈடுபடுதல் போன்ற பலவிததுறைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

### நிதி வசதி

மாணவர்கள் கல்விபயிலும் காலத்தில் அவர்களுக்கு நிதிக்கஷ்டமேற்படாது கவனிப்பதும் பல்கலைக்கழகத்தின் பொறுப்பாகும். நிலம் முதலியவற்றைத் தங்கள் படிப்புக்காக ஈடு செய்து வங்கிகளில் கடன் பெற வசதியளிக்க வேண்டும். மேலும் வசதியற்ற மாணவர்களுக்கு உபகராச் சம்பளம் முதலியவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், இதுமட்டுமன்றி பட்டப் படிப்பு முடிந்ததும் அப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொறுப்பையும் பல்கலைக்கழகமே செய்யவேண்டும்.

மேலும் மேற்குறிப்பிட்ட [illegible]

# யேசுவே! எமக்கு பிறரைநேசித்து மதிக்கும் மனம் தாரும்

## வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்கு உதவி

கிழக்கு-தெற்கு மாகாணங்களில் பயங்கர வெள்ளத்தால் அவதிப்படுபவர்களுக்கு கஷ்டநிவாரணமளிக்க யாழ்ப்பாண அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளை 'ஈழநாடு' பத்திரிகையில் கண்டதும், யாழ்ப்பாணம் பெரியகடை ஆஸ்பத்திரி ரோட் 236ம் நம்பரில் உள்ள திரு டன்லப் வின்சென்ட் ஐ.ஜே. தத்துவாம் பீரிஸ், நிவாரண நிதிக்காக ரூ. 50தை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு கருணையுடன் அனுப்பிவைத்துள்ளார். அத்துடன் அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாழ். அரசாங்க அதிபரின் வேண்டுதலைக் கண்ணுற்றதும், இச்சிறு உதவியைச் செய்ய முன்வந்தேன்.

அரக்கசோதனையாக கடும் வெள்ளம் எமது தெற்கு, கிழக்கு மக்களை வெகுவாகப் பாதித்துநிர்க்கதிக்குள்ளாக்கி செயலற்றுப்போகச் செய்துபலஅரிய உயிர்களைப் பலி கொண்டு கண்கலங்கி நிற்கவைத்துவிட்டது.

ஐ நா. சபையிலே எமது தலைவர் ஜீ.ஜீ. அவர்கள் முன்னர் குறிப்பிட்டதுபோல், உலகத்திலேநாம்ஒவ்வொருவரும் ஓர் அம்சம். இதில் எவ்வுயிர் சேதப்பட்டாலும் பாதிக்கப்பட்டாலும் நாமே பாதிக்கப்பட்டது போன்று, நான் பாதிக்கப்பட்டது போல ஆகும்'. எமது நாட்டைப்பாதித்த இக்கடுமழை, புயல், வெள்ளம், மண்சரிவு, அது கிழக்கென்ன, மேற்கென்ன, வடக்கென்ன, தெற்கென்ன, நாம் (நம்மில் ஒரு அங்கம்) பாதிக்கப்பட்டதற்குச் சமம்.

'அடுத்தவரின் தேவையே, என்னுடையதைவிட முக்கியமானது' என்ற மனப்பான்மைக்கு அடிப்படையாகக் கொண்டுள்ள, இரக்க குணமும், மகிழ்ச்சியும் பொருந்திய யேசுவே! எமக்கு பிறரை நேசித்து மதிக்கும் மனம் தாரும்'.

ஃ ஃ ஃ

பிரதேசம், இனம் முதலிய வேற்றுமைகளை கவனிக்காமல், உடன் இந்த உதவியை அனுப்பிவைத்த அன்பரின் பரந்த - இளகிய உள்ளம் போற்றத்தக்கது. மற்றப் பகுதி மக்களின்மீது வடக்கிலுள்ளவர்களுக்கு அனுதாபமுண்டு என்பதைக் காட்ட இது நல்ல சந்தர்ப்பமாகும்: இந்த முன்மாதிரியைப் பின்பற்றி மற்றும் பல அன்பர்களும் உதவிபுரிய முன்வருவரென்று நம்புகிறோம்.

சேரும் உதவிப்பணத்தை 'ஈழநாடு' பத்திரிகையில் பெயருடன் வெளியிடுவதுடன், அவ்வப்போது யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கிறோம்.

# வாலிபர் எத்தொழிலையும் ஏற்கமுன்வர வேண்டும்

## சனசமூக சங்க மாநாட்டில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், செவ்வாய் வாலிபர்கள் எந்த வேலை செய்யவும் தயாராக இருக்க வேண்டும். கூலி வேலைசெய்வது குறைவானது என்று கருதக் கூடாது. முதலில் குறைந்த வேலைகிடைத்தால் அதிலிருந்து முன்னேற முயற்சிக்க வேண்டும். பட்டதாரிகளில் பலர் ஆண்டுக்கணக்காக வேலையின்றிக் கஷ்டப்பட்டனர். கடைசியில், குறைந்தசம்பளமுள்ள மாணவர் ஆசிரியர்களாக வந்து பின் அதன் மூலம் பட்டதாரி தராதரம் பெற்றுள்ளனர். ஆதலால் ஒவ்வொருபடித்த வாலிபரும் எந்த வேலையையும் ஏற்க தயாராக இருந்தால் தான் முன்னேற முடியும்.

யாழ்ப்பாணம் சச்சேரியில் நேற்றுமுன்தினம் நடந்த சனசமூக நிலைய நிர்வாக மகாநாட்டில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஏ. ஜோசப் பேசும் போது கூறினார்.

அரசாங்க அதிபர் திரு [illegible]

னியருக்கு உரிமையானது என்ற அபிப்பிராயம் நிலவி வருகிறது. இந்த தப்பபிப்பிராயம் நீங்கவேண்டும். கூலிவேலை செய்பவனும் கோட்டுபோடலாம். கட்டை தறிப்பவனும் கால்சட்டை போடலாம். இதற்கு எவ்விததடையும் கிடையாது. விவசாயி வேட்டிதான் உடுக்க வேண்டும் என்ற விதிவிலக்கும் இல்லை. யார் வேண்டுமானாலும் தங்கள் சௌகரியத்திற்கேற்றபடி என்ன உடையும் போடலாம்.

வீட்டில் வெள்ளையடிப்பது வேலியடைப்பது, விறகு கொத்துவது, போன்ற வேலைகளை நாமே செய்யலாம் இதற்கு வெட்கப்படக் கூடாது. மேல் நாட்டிலெல்லாம், தங்கள் வீட்டு வேலைகளை எல்லாம் தாங்களே செய்கிறார்கள் ரோட்டைத் திருத்துவதும் குளத்தைச் சுத்தம் செய்வதும் போன்ற சிரமதான வேலைகளை ஒரு தொண்டாக கருதி செய்ய வாலிபர்கள் முன் [illegible]

# தமிழ் நாட்டுச் செய்திகள்

### டாக்ஸிமோதி சிறுமிமரணம்

ஜனவரி, 5

கோடம் பர்ககத்தைச் சேர்ந்த 6வயதுசிறுமி சரஸ்வதி டாக்ஸியால் மோதப்பட்டு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார், சிறுமியை மோதிய டாக்ஸி வீடொன்றின் சுவரில் மோதியே நின்றது. டாக்ஸி சாரதி பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

### 6மாதம் சிறை

சென்னை, ஜன. 5

சென்னை பெரம்பூரிலுள்ள மார்ட்டின் பெர்னன்டோ என்பவரின் வீட்டில் 4,000 ரூபா மதிப்புள்ள நகைகளை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு ராமநாதபுரத்தைச் சேர்ந்த காந்தி என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 6மாத [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வது.

0 தோட்டப்பாடசாலைகளைத் தேசியமயமாக்குவது என்பன அந்தக் கூட்டத்தில் செய்து கொள்ளப்பட்ட சில முடிவுகளாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் முன்னர் ஆட்சிபீடத்திலிருந்த பொழுதே இவற்றைச் செய்திருந்தால் இன்றும் நாளையும் அவர்கள் ஆட்சிபீடத்தில் அமைதியாக அமர்ந்திருக்க முடியும். என்றாலும் இப்பொழுதாவது அவர்கள் நிலைமையை உணர்ந்திருப்பதைக் குறித்து அவர்களைப் பாராட்ட வேண்டும்.

வகுப்புவாதம் ஒன்றையே மூலதனமாக வைத்து தேர்தலில் வெற்றியீட்டியவர்களை அந்தந்தத் தொகுதி மக்கள் குறிப்பாகப் பெரும்பான்மைச் சமூகத்தினரே நிராகரித்து விட்டனரென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். வேறு வழியில்லாமலும் சிறுபான்மைச் சமூகத்தினர் போதிய ஆதரவளிக்கத் தவறியதாலும் வகுப்புவாதக் கட்சியுடன் இணைந்து அதே போக்கைப் பின்பற்றிய இடதுசாரிக் கட்சிகள் சில இன்றுள்ள உண்மைநிலையை சரியாக எடுத்துக்காட்டிய பின்னரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நிர்க்கமயன, உறுதியான சில நடவடிக்கைகளை அவர்கள் துணிச்சலுடன்கூட்டாக மேற்கொள்ள முடியும்:

சிறுபான்மைச் சமூகத்தினருக்கு இதுவரைசட்ட ரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் இழைக்கப்பட்ட அநீதிகளை அகற்றவும் இந்த நாடு பெற்ற சுதந்திரத்தை அவர்களும் அனுபவிக்கவும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல்தலைவர்களும், அரசியல் கட்சிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

இது இப்போது அதாவது அடுத்த பொதுத் தேர்தல் சமீபித்து வருவதால் அந்த அளவுக்கு நமது அரசியல் வாதிகளுக்கு துணிச்சல் ஏற்படாது என்ருல் சகல கட்சிகளும் சேர்ந்து மொழி, இன மத, துவேஷப் பிரசாரத்துக்கு தேர்தல் பிரசாரத்தில் இடம் கொடுப்பதில்லையென்றும் தேசியப் பிரச்னைகளுக்கு அடுத்த தேர்தலின்பின் தேசிய ரீதியில் தீர்வுகாணலாமென்றும்அறிவித்து தேர்தல் பிரசாரத்துக்கென 'நெறிமுறை கோட்பாடு' ஒன்றை உருவாக்கிக்கொள்வது நல்லது. செய்வார்களா?

# பூநகரியில் வெள்ள நிலைமை

பூநகரி, திங்கள்

பூநகரிப் பகுதியில் 10 நாட்களாகத் தொடர்ந்து விடாது பெய்துகொண்டிருந்த மழை இப்போது ஓய்ந்துவிட்டது. மன்னார்-பூநகரி வீதியில் 4 அடி உயரத்தில் பாய்ந்த மண்டைக்கல்லாறு 2 அடியாகக் குறைந்துள்ளது கிளிநொச்சி-பூநகரி வீதியிலுள்ள குடமுருட்டி ஆறு ஒன்றரை அடி தண்ணீர் ரோட்டை மேவிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இரு வீதிகளாலும் பஸ் போக்குவத்தோ அல்லது வேறு வாகனப் போக்குவரத்தோ நடைபெறமுடியாதவாறு ரோட்டுகள் பிரிக்கப்பட்டுப் பள்ளங்களும், கற்குவியல்களுமாக காணப்படுகின்றன. பூநகரியிலிருந்து வடும் 3ம் கட்டையில் ஒரு மைல் நீளத்திற்கு வெள்ளம் ஓரடி உயரத்தில் தேங்கி நிற்கிறது.

## மக்கள் கஷ்டம்

பூநகரிப் பகுதிக்கு வெள்ளம் ஏற்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை பஸ்சேவை துண்டிக்கப் பட்டுள்ளதால் மக்கள் சொல்லொணுத் துயருறுகிறார்கள், அத்துடன் தபாற்சேவையும் இல்லாதது குறிப்பிடத்தக்கது. பூநகரிக் காரியாதிகாரியின் முயற்சியால் கிளிநொச்சி ஊடாக வந்த தபால் தற்காலிமாகச் சாவகச்சேரி ஊடாக வருவிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பயிர்ச் சேதம்

அறுவடைக்குப் பதமாயிருந்த 500 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்கள் இப்பெருவெள்ளத்தினுல் நாசமாக்கப்பட்டுள்ளன. நெல் மணிகள் கதிரோடு வெள்ளத்தினுள் அமிழ்ந்து கிடக்கும் காட்சி ஒவ்வொரு விவசாயியையும் கண்ணீர் விட வைத்துள்ளது குறிப்பாகப் பூநகரியைச் சேர்ந்த செட்டியகுறிச்சி என்னும் கிராமத்தில் அதிக அழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## கால்நடைச் சேதம்

பூநகரியைப் பொறுத்த மட்டில் மனித உயிருக்கு ஓராபத்தும் நேரார்விடினும், 200க்கு மேற்பட்ட பட்டி ஆடுகளும், மாடுகளும், ஏராளமான கோழிகளும் இறந்துள்ளன.

## நீந்திக் கடந்தனர்

மலேரியாத்தடை மருந்து தெளிப்பதற்காகக் கிளிநொச்சியிலிருந்து ஜீப் மூலம் இராமநாதன், தர்மராசா ஆகிய இருவர் தலைமையிலும் வேரவில், பல்லவராயன்கட்டுக்குச் சென்ற இரு கோஷ்டிகளும் ஆற்றுப்பாய்ச்சலால் திரும்பிவரமுடியாது இரண்டுநாள் பட்டினி கிடந்து, பின்னர் ஆற்றை நீந்திக் கடந்து கிளிநொச்சியை அடைந்ததாகத் தெரியவருகிறது. ஆறு வற்றுதபடியால் ஜீப் இன்னமும் பல்லவராயன்கட்டு என்னுமிடத்தில் நிற்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

திரம் இருக்க வேண்டும். இப் பல்கலைக்கழகத்துக்கு இலங்கைத் திராவிட பல்கலைக்கழகமெனப் பெயரிடலாம். தமிழ்மக்கள் திராவிட கலாசாரத்தவர்களாதலால் அக்கலாச்சாரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் குறிக்கவே இப்பெயரேயன்றி இப்பெயரைக் கொண்ட அரசியல் நிறுவனங்களின் தொடர்பு பற்றியல்ல எச்சந்தர்ப்பத்திலும் இத்தகைய நிறுவனங்களோடு ஒருவித தொடர்பும் இருக்கமாட்டாது. தமிழர்களுக்கென அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தைத் தமிழ் பல்கலைக்கழகம் என்ருே அல்லது நாவலர் பல்கலைக்கழகம் என்ருே அல்லது வேறு பெயரிட்டழைக்கவோகூடாதென்பதற்குப் பல காரணங்கள் உள.

## போதனு மொழி

இப்பல்கலைக்கழகத்தின் போதனுமொழி கட்டாயமாக ஆங்கிலமாகவே இருக்க வேண்டும். ஆனுல் மாணவர்களை அனுமதிக்கும்போது தமிழ். ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் கற்றவர்களை அனுமதிக்கலாம். சிங்களத்தையும் ஒருமொழியாக இப்பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு வசதியளிக்க வேண்டும். இறுதிப் பரீட்சையில் சிங்களம், தமிழ், தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றில் கட்டாயமாகப் பரீட்சை நடத்தப்பட்டு வேண்டும்

## மாணவர்களை அனுமதித்தல்

மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கும் விடயத்தில் அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளையே கருத வேண்டும். மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமக்கும் விடயத்தில் இன மத வேறுபாடு காட்டக் கூடாது. நேர்முகப் பரீட்சைகளின் போதும், பரீட்சையின் போதும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்குச் சுட்டிலக்க முறையையே கையாளுதல் வேண்டும்.

## மதம்

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தங்கள் மதங்களைத் தழுவுவதற்கு அனுமதியளிப்பதோடு ஆதரவும் அளிக்க வேண்டும். இந்துமதம்மட்டுமன்றி கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்தமதங்களுக்கும் ஆதரவளிக்கவேண்டும்.

## தேவைக்கேற்றகல்வி

வியாபாரநிர்வாகம், வர்த்தகம், சந்தைப்படுத்தல், கணக்கியல் முதலியனபற்றி கல்வி கைத்தொழில் பிரிவிலும், பலவித உற்பத்திகள், சிற்பக்கலைகள் பற்றிய கல்வி பொறியியல் பிரிவிலும், அன்னிய மொழிகள்பற்றியகல்வி மொழிப்பிரிவிலும் இதே போன்ற மற்றைய பகுதிகளில் அவ்வப்பிரிவுகளுக்கென குறிப்பிடப்பட்ட துறைகளையும்கற்பிக்கவேண்டும்.

## உயர்பட்டப்படிப்பு

பட்டம்பெற்ற மாணவர்கள் மேலும் கல்விகற்க விரும்பின் அவர்கள் உயர்பட்டப்படிப்பு படிப்பதற்கான வசதியும் இப்பல்கலைக்கழகத்தில் செய்துகொடுக்கப்பட வேண்டும் ஏதாவது எம்.ஏ. கலாநிதி பட்டங்கள் பெறுவதற்கான கல்விபெறஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதேயாகும்.

## ஆராய்ச்சி

பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கல்விக்கு ஆதரவளிப்பது மட்டுமன்றிஆராய்ச்சிக கல்வி விரிவுரையாளர்களுக்கு கட்டாயபாடமாக்கப் படவேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆராய்ச்சிகள் நடத்தி அவற்றை செய்கை முறைமூலமும் செய்து பார்த்து பிரசுரங்கள்மூலம்வெளியிடவேண்டும். இறுதியில் பரீட்சை எழுதும் எல்லா மாணவர்களுக்கும் ஆராய்ச்சிக்கல்வி முக்கியமாக்கப்படுவதோடு இறுதியாண்டில் அவர்கள் ஆராய்ச்சித் தொகுப்பொன்றையெழுதுதல் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

செய்ய வேண்டும், இதுமட்டுமன்றி பட்டப் படிப்பு முடிந்ததும் அப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொறுப்பையும் பல்கலைக்கழகமே செய்யவேண்டும்.

மேலும் மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் வேறு பகுதிகளும் பன்முகப்படுத்தப்படல் வேண்டும் இப்பிரிவுகளில் சேகரிக்கப்படும் நிதிகளை தலைமைக் காரியாலயங்களின் மேற்பார்வையின் கீழ் அவ்வப் பிரிவுகளை விஸதரிப்பதற்குச் செலவிடுதல் பொருத்தமானதாகவமையும்

யாழ்ப்பாணம் சச்சேரியில் நேற்றுமுன்தினம் நடந்த சனசமூக நிலைய நிர்வாக மகாநாட்டில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஏ. ஜோசப் பேசும் போது கூறினுர்.

அரசாங்க அதிபர் திரு பீற்றஸ் தலைமையில் நடைபெற்றஇம்மாநாட்டில் திரு. ஜோசப் மேலும் கூறியதாவது:-

சிரமதானம் செய்வதற்கு சிலர் கூச்சப்படுகிருர்கள். இதை ஒருதேசத் தொண்டாக கருதவேண்டும்.

கால்சட்டைமேல் சட்டை போடுவது, டாக்டர், இன்ஜினியரான... மேல் நாட்டிலெல்லாம், தங்கள் வீட்டு வேலைகளை எல்லாம் தாங்களே செய்கிருர்கள் ரோட்டைத் திருத்துவதும் குளத்தைச் சுத்தம் செய்வதும் போன்ற சிரமதான வேலைகளை ஒரு தொண்டாக கருதி செய்ய வாலிபர்கள் முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் டாக்டராக இன்ஜினியராக, பெரிய உத்தியோகத்தராக வர வேண்டும் என்ற அபிப்பிராயம் வாலிபர் மத்தியில் நிலவிவருகிறது. இதனுல் தான் சிறிய தொழிலை ஏற்க தயங்குகிருர்கள். வடபகுதியில் நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் பல வருடங்களாக வேலையின்றி இருக்கிருர்கள். இதை மனதில் வைத்து வாலிபர்கள் எந்த தொழிலையும் வெட்கப்படாமல் செய்ய முன்வர வேண்டும்.

மார்ட்டின் பொன்னன்டோ என்பவரின் வீட்டில் 4,000 ரூபா மதிப்புள்ள நகைகளை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு ராமநாதபுரத்தைச் சேர்ந்த காந்தி என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 6மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

0 0 0

## கொள்ளைக்காரர் வருகிருர்கள்

சென்னை, ஜன. 4

மதுரையில் பிடிபட்ட கொள்ளைக் கோஷ்டியாரை விசாரணையின் பொருட்டு பொலிசாரால் சென்னைக்கு கொண்டுவரப்படவிருக்கின்றனர். இவர்கள் விசாரணையின் போது இங்கு தாங்கள் திருடிய இடங்களை அடையாளம் காட்டுவார்களென அறிவிக்கப் படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

பல்கலைக்கழகம்

# தமிழ்த் தலைவர்கள் பேசாமலிருப்பது நல்லது

பல காலமாகக் கோரப்பட்டுவந்ததும், தமிழ்ப் பெற்ருேரின் பொருளாதாரப் பிரச்னைக்குச் சிறிதளவாவது விடிவு ஏற்படுமென நம்பப்பட்டு வந்ததுமான பல்கலைக்கழகம் இந்த ஆட்சியிலோ அல்லது பொதுத் தேர்தலின் பின் நடக்கும் ஆட்சியிலோ எமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து போய்க் கொண்டிருக்கிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து பல மைல்கள் பிரயாணஞ்செய்து பேராதனையிலும், கொழும்பிலும் பல இன்னல்களை அனுபவித்துப் படித்துப் பட்டம் பெறவேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிருர்கள், நமது இளம் மாணவ மாணவிகள்

தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி இரு பெரும் அரசியற் கட்சிகள் அரசாங்கத்தைக் கோரிவந்துள்ளன. இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகத்துக்கு ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டு வந்தது.

தற்போது வடக்கிலோகிழக்கிலோ பல்கலைக்கழகம் அமைப்பது என்பது பற்றி பொதுமக்களிடையே கருத்துக் கோரப்பட்டுள்ளது. 'இக்கருத்துக் கோரியது' உண்மையிலேயே தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தானு என்ற அச்சம் இப்பொழுது தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

தமிழ்ப்பகுதிகளில் பல்கலைக்கழகம் ஒன்று அமைவதற்கு தடையாக, முட்டுக்கட்டையாக உள்ளவர்கள் நமது தமிழ்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களே யாவர்.

இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என ஒரு சாராரும், இல்லை தமிழ்ப் பல்கலைக்கழகம் தான்வேண்டும் என்று இன்னெரு சாராரும் கேட்பதோடு நிற்காமல், அந்தப் பல்கலைக்கழகத்தை வடக்கிலா கிழக்கிலா அமைப்பதென்பது பற்றியும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளனர்.

இவ்விரு தமிழ்க்கட்சிகளின் போட்டியை நன்கு பயன்படுத்தும் ஆட்சியாளர்கள் தமிழ்ப் பகுதிகளில் பல்கலைக்கழகம் நிறுவாது விட்டுவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உண்மையிலயே தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்ற பேரவா, நமது தமிழ்த்தலைவர்களிடையே இருந்தால் அவர்கள் பல்கலைக்கழக விவகாரம் பற்றி எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது

—சிந்தனைச்செல்வன்
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

**தில்லையம்பலம் பொன்னையா**

அளவெட்டியைச் சேர்ந்தவரும் அன்னம்மாவின் அன்புக் கணவருமாகிய மலேயன் பென்சனர் தில்லையம்பலம் பொன்னையா அவர்கள் காலமாகிவிட்டார், ஈமக்கிரியைகள் இன்று (6-1-70) அளவெட்டியில் நடைபெறும். 1759

# பிற நாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களின்சேவைகள் பல

—அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், செவ்.

இங்கிலாந்துபோன்ற தேசங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் பல பாகங்களிலும் மக்களுக்காக சேவைசெய்து வருகிறது. உள்ளூராட்சிமன்றமும் அதன் பிரதிநிதிகளும் மக்களுக்காக திறம்படச் சேவையாற்ற வேண்டும். இம்மன்றங்கள் திறம்பட செயலாற்ற இங்கிலாந்தில் அரசாங்கம் கூடிய பொறுப்பை அளித்துள்ளது. இங்கும் அப்படி திறம்படச் செயலாற்ற அரசாங்கம் ஊக்கம் அளிக்கவேண்டும்.

சனசமுகசங்க நிர்வாகமாநாட்டில் அரசாங்க அதிபர் திரு. பீற்றஸ் பேசும் போதுமேற்கண்டவாறு கூறினுர்.

திரு. பீற்றஸ்மேலும் கூறியதாவது: அரசாங்கம் மக்களுக்கு எல்லாவித வசதிகளையும் செய்து கொடுக்க முடியாது' அதற்கான உத்தியோகத்தர்களும் நிதியும் கிடையாது. மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய முன்வரவேண்டும்.

மக்களின் தேவைகளை நேரடியாக கவனிக்கவே உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டது. சிரமதான வேலைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊக்கமளிக்க வேண்டும். அப்படியானுல் தான் கிராமங்கள் முன்னேறும்.

# பஸ் சாரதிகள் தகராறு: பிரயாணிகள் தீர்த்து வைத்தனர்

சாவகச்சேரி, திங்கள்

பஸ் சாரதிகள் இருவருக்கு ஏற்பட்ட தகராற்றை அதேபஸ்ஸில் வந்த பிரயாணிகள் தீர்த்துவைத்து பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பினர்கள் இச்சம்பவம் நேற்றிரவு சங்கத்தானையில் நடந்தது.

எதிதிரெராகவந்தஇருஇரடைத்தட்டு பஸ்கள் முட்டிக் கொண்டதால் ஒருபஸ்ஸின் கண்ணுடி உடைந்ததைத் தொடர்ந்து பஸ் சாரதிகளுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

பஸ்ஸில்வந்த பிரயாணிகளைப்பற்றி அக்கறை காட்டாமல் தங்கள் மீதுபிழையில்லையென இருபஸ்சாரதிகளும் நீண்டநேரம் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். வாக்குவாதம் கைகலப்பாக மாறிவிடுமோஎன்று அஞ்சிய பிரயாணிகள் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிவைத்தனர்

கொடிகாமத்திலிருந்து வந்தபஸ்ஸும் யாழ்ப்பாணத்திலிருந்துவந்த பஸ்ஸும் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

## மேயர் தெரிவு

நீர்கொழும்பு, திங்.

இம்மாதம் 8-ம் திகதி நீர் கொழும்பு மேயர் தெரிவு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org